BTA

BERGEN TAMILSK AVIS

**48**

March 2026

# தேன்தமிழிதழ்

Org.nr: 926 840 320 - ISSN: 2703-8440 (Print ISSN: 2703-8785)



## சுற்றுச்சூழல்

### யாழ்ப்பாணத்தின் மூச்சுக்காற்று ஆபத்தில்....

படம்: குமணன்



# ஆசிரியம்!



நீ மட்டும் முடிவெடுப்பதல்ல நமக்கான உடன்படிக்கை,
நீயும் நானுமாக பேசி முடிவெடுப்பதே அமைதிக்கான அறம்.

## வணக்கம் உறவுகளே!

மத்திய கிழக்கு நாடுகளில் நடந்து கொண்டிருக்கும் யுத்தத்தின் பாதிப்பு உலக நாடுகள் அனைத்தையுமே உலுக்கி வருகிறது. ஒரு சில நாட்களில் அல்லது ஒரு வாரத்தில் முடிந்து விடும் என்ற யுத்தங்கள் தொடர்ந்து கொண்டே செல்கிறது. அரசியல் ரீதியாகவும், வர்த்தக ரீதியாகவும் இந்த உலகை ஆளும் முக்கியமான நாடுகளில் இன்று யுத்தம் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கிறது. இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா - ஈரானுடன் தொடுத்திருக்கும் போரானது உலக நாடுகள் அனைத்தையும் பல வழிகளிலும் பாதிப்படைய செய்துள்ளது. குறிப்பாக பொருளாதார ரீதியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. எரி பொருட்களின் தட்டுப்பாடு, விலை உயர்வு, பண வீக்கம் போன்றவை உலக நாடுகள் அனைத்துக்குமே பெரும் சவாலாகவே தோன்றியுள்ளது.

ஹோர்முஸ் நீரிணை முடக்கப்பட்டமை சர்வதேச அளவில் எரிபொருள் வினியோகத்தை துண்டித்து உள்ளது. இதனால் அனைத்து நாடுகளிலும் எரி பொருட்களின் விலை வெகுவாக உயர்ந்துள்ளது. ஈரான் - அமெரிக்க இஸ்ரேல் நாடுகளுக்கிடையிலான போர் மிக விரைவில் இணக்கப்பாட்டுக்குள் வந்து நிறுத்தப்படாவிட்டால் மிகப் பெரும் அளவிலான தாக்கங்களையும், சவால்களையும் உலக நாடுகள் சந்திக்க நேரிடும்.

நாம் முன்னைய இதழ்களில் கூறியது போல் அமைதியான, மனிதத்தை நேசிக்கவல்ல உலகம் உருவாக வேண்டுமெனில் அரச அதிபர்கள் மனம் மாற வேண்டும். தம்மிடம் உள்ள அணு ஆயுதங்களை கொண்டு தமது பலத்தை காட்டி அப்பாவி மக்களை கொன்று குவிப்பதும் பல ஆண்டுகளாக கடினப்பட்டு கட்டியெழுப்பிய பெரும் கட்டிடங்களையும், உடமைகளையும் அழித்து தரைமட்டமாக்குவதும் மனிதமற்ற செயல்கள் ஆகும். இவ்வாறிருக்கையில் எப்போ, எங்கே, எக்கோணத்தில் போர் ஆரம்பிக்குமோ என்ற பதற்றம் மேல் நாடுகளெங்கும் பரவலாக காண முடிகிறது. அமைதிக்காக போராடும் நோர்வே நாடும் தமது நாட்டில் போர் சூழ்ந்து விடலாம் என அச்சப்படுவதையும், பாதுகாப்பு திட்டங்களில் அதிக கவனம் கொள்ளுவதையும் உணர முடிகிறது.

நோர்வேயில் பாதுகாப்பு அமைச்சர் அண்மையில் செய்தி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்:
“நான் நாட்டின் பாதுகாப்பு குறித்து பல கேள்விகளை பெறுகிறேன். பலர் அச்சம் கொள்கிறார்கள். அதனை நான் புரிந்து கொள்கிறேன். இன்று நடைபெற்றுவரும் யுத்தம் குறித்து நாம் கவலைப்படலாம். ஆனால் பயப்படக்கூடாது. நோர்வேயின் பாதுகாப்பு படைகளையும், பாதுகாப்பையும் நாம் வலுப்படுத்தி வருகிறோம்” எனக் கூறியுள்ளார்.
விரைவில் இக்கொடிய யுத்த மேகம் விலகி அமைதியான உலகம் உருவாக வேண்டுவோம்.



தேன் தமிழிதழ்
*Ansvarlig redaktør:* **Julius Antoni**
*ஆசிரியர்:* **யூலியஸ் அன்ரனி**
*தொலைபேசி எண்: (47) 924 63 674*

BTA
BERGEN TAMILSK AVIS

**Vipps 729129, eller
bank konto: 3626 31 78585**

# நீங்கள் தலை நிமிர்ந்து நில்லுங்கள் ஏனெனில், உங்கள் மீட்பு நெருங்கி வருகின்றது *(லூக்கா 21:28)*





Fr. J. S. René Beshman OMI

இறைவனிலே நம்பிக்கை கொண்ட தேன்தமிழிதழின் வாசகர்களே, உங்கள் அனைவருக்கும் எம்பெருமான் இயேசுக்கிறிஸ்துவின் உயிர்ப்பு பெருவிழா நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் பேரானந்தம் அடைகின்றேன்.

ஆண்டவர் இயேசுவினுடைய பிறப்பும் உயிர்ப்பும் மனித வரலாற்றையே புரட்டிப்போட்ட அதிசயங்கள். மனுமகன் இயேசுவை மீட்பராக ஏற்றுக்கொண்டோருக்கும், அவரை அவதார புருசராக ஆரூடம் கூறுவோருக்கும், அவரையே புரட்சியின் நாயகனாக பின்பற்றுவோருக்கும் மட்டுமா அவர் தன்னுடைய அனுக்கிரகத்தை உவந்தளிப்பார்? இல்லவே இல்லை.

இறையேசுவின் திருப்பெயரைக் கேள்விப்படாமலே அவரது இறையரசு விழுமியங்களை தமது இயல்பான வாழ்வாக்கி அதற்காகவே தமது உயிரை இழக்கவும் தயாராக உள்ள அனைத்து நல் உள்ளங்களையும் அவர் மீட்டு இரச்சிப்பார் என்பதே சத்தியம்.

உண்மைக்காக, நீதிக்காக, சமத்துவத்துக்காக, அன்புக்காக துன்பப்படுவோரே பாவ வாழ்க்கையில் இருந்து விலகி நல்வழி காண, இன்னல்கள் இடையூறுகளைச் சந்தித்து துவண்டு போனோரே நல்வழி வாழ தலைப்பட்டு எந்த பிரயோசனமும் இல்லை என எண்ணி விரக்தியில் வாழ்வோரே, உங்களைப்பார்த்து உயிர்த்த எமதாண்டவர் இயேசு கிறிஸ்து கூறுகின்றார்

“உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு, எனினும் துணிவுடன் இருங்கள். நான் உலகின்மீது வெற்றி கொண்டுவிட்டேன்” (யோவான் 16:33) இதே உயிர்ப்பின் வெற்றியை நீங்களும் சுவைத்துக் கொண்டாட எனது செபங்களும் ஆசீர்வாதங்களும் என்றும் உங்களுடன் இருப்பதாக.

Fr. J. S. René Beshman OMI,
St. Paul Menighet, Nygårdsgaten 3,
5015 Bergen, Norway.
Office: +47 552 15 968
Mobile: +47 413 48 336



# தடம் மாறும் எதிர்காலத் தலைமுறைகள்

யூலியஸ் அன்ரனி

**நோர்வேயில் இளையோரின் குற்றச் செயல்கள் அதிகரித்து வருகின்றன. நாளுக்குநாள் இளையோர் குற்றங்கள் பதிவாகி வருகின்றன.**

2022ஐ விடவும் 2023இல் கிட்டத்தட்ட 23,400 க்கும் அதிமான குற்றங்கள் பதிவாகியுள்ளன. கொலை, கொள்ளை, பாலியல் துஷ்பிரயோகம், ஆயுதங்களை பயன்படுத்துதல், பொது இடங்களில் வன்முறைகளில் ஈடுபடுதல், டிஜிட்டல் தளங்கள் வழியான வன்முறைகள் போன்றனவற்றில் ஈடுபட்டு வருகின்றனர். நோர்வேயின் பெரும்பாலான இளை-யோர் சிறந்த பண்பான வாழ்க்கைச் சூழலில் வாழ்ந்து வந்தாலும், சட்டங்களை மதித்து வந்தாலும், பாடசாலைகளில் பண்பாட்டு கல்வி கொடுக்கப்பட்டாலும், ஏதோ ஒருவகையில் குற்றச் செயல்கள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. குடும்பங்களில் பிள்ளை வளர்ப்புச் சூழல், பெரியவர்களின் பாதுகாப்பின்மை, குடும்ப வன்முறை, கடினமான குடும்ப சூழல், போதைப்பொருள் பழக்கவழக்கம் போன்ற காரணி-கள் இளையோரை குற்றச்செயல்கள் புரிய வெகுவாக தூண்டுகின்றன.

சமூக ஊடகங்களின் பயன்பாடுகள் இளைஞர்களுக்கு இடையிலான மோதல்களை அதிகரித்து வருகிறது. நோர்வே செல்வந்த நாடாக இருந்தாலும் ஏராளமான இளையோர் வறுமையில் வாழ்ந்து வருகிறார்கள் எனவும் புள்ளிவிபரங்கள் குறிப்பிடுகின்றன.

இளையோரின் குற்றச்செயல்களை தடுக்க அல்லது குறைக்க நோர்வே நகர சபைகள் பல வழிகளிலும் செய்யப்பட்டு பணியாற்றி வருகின்றன. பொதுவாக நோர்வேயின் பெரிய நகரங்களிலேயே குற்றச் செயல்கள் அதிகம் நடைபெற்று வருகின்றன. அதேவேளை, இதன் வளர்ச்சி சுற்றியுள்ள பல சிறிய நகரங்களையும் பாதித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இளைஞர்களுக்கு இடையிலேயே எதிர் எதிராக வன்முறைகள் அதிகம் நடைபெறுகின்றன. 2021ம் ஆண்டு கொரோனா பெருந்தொற்றுக்குப் பின்னர் இளையோருள் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன என காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

இளைஞர்களின் வன்முறைகள், குற்றங்கள் என்பவை ஒரு நகர பிரச்சனை மட்டுமல்ல, அது ஒரு தேசிய சவாலாக இங்கு கருதப்படுகிறது.

இளைஞர் குற்றங்கள் தொடர்பிலான நோர்வே அரசின் நி-புணர் குழு “அவர்கள் நமது குழந்தைகள்” எனும் தலைப்பில் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளனர். அவ்வறிக்கையில் சமூக ஊடகங்களின் பயன்பாடு மற்றும் போதைப் பொருட்களின் பாவனைகள் குறித்த கண்ணோட்டங்கள் அச்சத்தை அடிப்படையாக கொண்ட மௌன கலாச்சாரத்தின் பரவலான வளர்ச்சி எனவும், வலுவான குற்றவியல் வலையமைப்புகள், இளையோரின் வன்முறைகளை அதிகரிக்கும் காரணிகளாகும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

அதேவேளை, இளையோர் குற்றவியல்தடுப்பு அதிகாரிகளின் அறிக்கையின்படி குற்றத்தடுப்பு நடவடிக்கைகளுக்குப் போதுமான முன்னுரிமை அளிக்கப்படுவதில்லை என்றும், ஆபத்தில் உள்ள இளைஞர்களை பின்தொடர்வதில் உள்ள குறைபாடு, அரசு மற்றும் நகராட்சி சேவைகளுக்கு இடையிலான ஒருமித்த பணிகளில் வெற்றி பெறுவதில்லை என்றும் விமர்சிக்கப்படுகிறது.
போதைப்பொருள் துஷ்பிரயோகம், மன நலம் தொடர்பான சிறுவர் நல பணிமனைகள் மற்றும் சிறப்பு சுகாதார சேவை தலங்கள் இணைந்து செயற்படுவதில் தெளிவு நிலை காணப்படுவதில்லை எனவும் குறிப்பிடப்படுகிறது.

பல இளைஞர்கள் குடும்பம், பாடசாலை, ஓய்வுநேரம், சிறுவர் நலன் போன்றவற்றில் தோல்விகளை அனுபவித்துள்ளனர். சிறுவர்களின் சிறுபராய வாழ்வில் மன அமைதி மிகவும் முக்கியம். அவர்கள் கவனமாக வளர்க்கப்பட வேண்டும். அமைதியான, சாந்தமான சூழலில் வளர்க்கப்பட வேண்டும். அதற்கு குடும்ப சூழல், பாடசாலை, சமூகம் அனைத்தும் முக்கியமான காரணிகள் ஆகும்.

இளையோர் குற்றவியல்கள் பற்றி தொடர்ந்து இனிவரும் இதழ்களிலும் உரையாடுவோம்.

# பாஸ்கா பட்டறை பயிலரங்கம்

## Påske Verksted

யூலியஸ் அன்ரனி

நோர்வே திருமறைக் கலாமன்றத்தின் ஒழுங்கமைப்பில் 27.03.26ஆம் நாளன்று சிறுவர், இளையோருக்கான பாஸ்கா பட்டறை சிறப்பாக Vestkanten கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.



இப்பட்டறையில் பல்வேறு கைவேலைகள் மற்றும் பாஸ்கா தொடர்பான விளையாட்டுக்கள் நடைபெற்றன. ஒவ்வொரு செயற்பாட்டிலும் சிறார்கள் மிகவும் ஆர்வத்தோடும், துடிப்போடும் கலந்து கொண்டனர். இவ்வாறான பயிலரங்கம் அல்லது பட்டறைகள் சிறுவர்களுக்குள் ஒற்றுமையையும், பண்பையும் வளர்க்கிறது என்பதில் ஐயமில்லை.



அத்துடன் நட்பை, புரிந்துணர்வை, ஒருவருக்கொருவர் உதவும் பண்பை, படைப்பாற்றலை மற்றும் மகிழ்ச்சியை வலுப்படுத்துகிறது. குழந்தைகள் ஒருவருக்கொருவர் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதையும், இணைந்து பணியாற்றுவதையும் அங்கு காண முடிந்தது.

**இவ்வாறான பயன்பாட்டுப் பட்டறைகளில் கலந்துகொள்ளும் சிறுவர்கள், வளர்ந்த பின்னர் வன்முறைகளில் ஈடுபடாது, சிறந்த மனிதம் நிறைந்த மனிதர்களாய் வாழ்வர் என்பது திண்ணம்.**

இவ்விடத்தில் சிறார்கள் தமக்கான உதவிகளைப் பெறுவதற்காக காத்திருந்ததையும், உதவிகள் தேவைப்பட்ட இளையவர்களுக்கு மூத்த சிறார்கள் உறுதுணையாய் இருந்து செய்தமையையும் காண முடிந்தது.
இடைவேளையில் சுவையான உணவு பரிமாறப்பட்டன.




மேற்கூறிய விடயங்கள் சிறுவர்களின் பண்பான வளர்ச்சிக்கு அதி முக்கியமானவை. அவற்றினை சிறுபராயத்திலேயே அவர்களுக்கு கொடுக்க வேண்டியது இந்த சமூகத்தின் பொறுப்பாகும். அதனை திருமறைக் கலாமன்றம் நோர்வே அமைப்பினர் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.



இவ்வாறான பயன்பாட்டுப் பட்டறைகளில் கலந்துகொள்ளும் சிறுவர்கள், வளர்ந்த பின்னர் வன்முறைகளில் ஈடுபடாது, சிறந்த மனிதம் நிறைந்த மனிதர்களாய் வாழ்வர் என்பது திண்ணம்.

(நோர்வே திருமறைக் கலாமன்றத்தின் ஒழுங்கமைப்பில் மூன்று வாரங்களுக்கு ஒருதடவை சிறுவர், இளையோருக்கான (2 வயது முதல் 18 வரை) ஒன்றுகூடல்கள், விளையாட்டுக்கள், கதை சொல்லல், சித்திரம் வரைதல், கலைப் பயிற்சிகள், கைவேலைகள் மற்றும் உணவு பரிமாற்றம் போன்றவை நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது)

# இலங்கைக்கு புதியதோர் அபாய எச்சரிக்கை



-M.A.Yaseer Arafath-

இலங்கைக்கு இது ஒரு நல்ல செய்தியல்ல, புதியதோர் அபாய எச்சரிக்கை. எல்நினோ என்று கேள்விப் பட்டிருப்பீர்கள். ஸ்பானிய மொழியில் குழந்தை யேசு பெரு நாட்டின் மீனவர்கள் கிறிஸ்மஸ் காலத்தில் கடல்நீர் வெப்பம் வழக்கத்தை விட அதிகமாக இருப்பதால் இதற்கு **"எல் நினோ"** என்று பெயர் இட்டனர். அமெரிக்க National Oceanic and Atmospheric Administration எல்நினோ தொடர்பான எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்கள். எல்நினோவின் ஆரம்ப அறிகுறிகள் தென்படுகின்றன அடுத்து ஆறுமாதங்களில் எல் நினோ தோன்றுவதற்கு 62 சதவீதமான வாய்ப்பு இருக்கிறது என்று அவர்கள் அறிவித்துள்ளனர்.

பசுபிக் சமுத்திரத்தில் ஏற்படும் தட்பவெப்பமாற்றம் காரணமாக உலகில் ஏற்படும் தற்காலிக காலநிலை மாற்றம் ஆனால் இதன் பாதிப்பு பூதாகாரமாக இருக்கும். 1998 காலத்தில் சந்திரிகா மின்வெட்டு மனதில் இருக்கும் அந்த காலத்தில் எல்நினோ காரணமாக ஆறுமாதங்கள் வரட்சி நிலவியது இடையே எப்போதாவது இலங்கையில் மழைவீழ்ச்சி மிகவும் குறைவாகவே இருந்தது.

இம்முறை எல் நினோ காரணமாக கோடை காலத்தில் அதிக வெப்பநிலை நிலவும் அதேநேரம் தென்மேற்கு பருவமழை குறையும் இதனால் வறட்சி ஏற்பட்டு தேயிலை மற்றும் றப்பர் உற்பத்தி பாதிக்கப்படும் தென் இலங்கை ஈரவலய பகுதியில் கடுமையான குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் நீர் மின் உற்பத்தி கடுமையாக பாதிக்கப்படும் சூடு காரணமாக மக்களுக்கு அதிக காற்றாடி ஏசி தேவைப்படும் எனவே மின் நுகர்வு அதிகரிக்கும் இதனால் நிலக்கரி டீசல் ஆகியவற்றின் தேவை அதிகரித்து மின் வெட்டு அமுல் படுத்த வேண்டிய நிலை உருவாகும் இது ஒரு விஷவட்டம் போல தொடரும்.

வடகீழ் பருவக்காற்று சுழற்சி அதிகரிக்கும் இதனால் வடகிழக்கு இலங்கையில் வெள்ள அனர்த்தம் உருவாகும். இதனால் நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டு உணவு தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகலாம். எனவே அதிக வரட்சி, அதிக வெப்பம் நீர் தட்டுப்பாடு வெள்ளம் உணவு தட்டுப்பாடு இத்தோடு மின்வெட்டு மற்றும் டெங்கு சிக்கன்குன்யா நுளம்புகள் பெருக்கம் ஆகியன இந்த எல்நினோ கொண்டு வரும்.

ஏற்கனவே ஹொர்மூஸ் நீரிணை நிச்சயமற்ற நிலை ஈரான் மீதான சர்வதேச சட்டங்களுக்கு எதிரான தாக்குதல் ஈரானின் எதிர்வினை என்று உலகமே அல்லோல கலாலோகமாக இருக்கும் நிலையில் எல் நினோவும் வந்தால் Double Whammy விளைவு உருவாகலாம். 1878, 1998, 2016 ஆகிய ஆண்டுகளில் மிக மோசமான எல்நினோ விளைவுகள் இலங்கையில் ஏற்பட்டன.

2024 எல்நினோ சத்தம் இல்லாமல் கடந்து போனது. இம்முறை இதன் விளைவின் அளவு என்னவென்று யாருக்கும் ஊகிக்க முடியாது. தெளிவாக ஆவர்த்தன ஒழுங்கு இல்லாமல் 2-6 வருடங்களுக்கு ஒருமுறை ஒழுங்கற்ற முறையில் தான் இது உருவாகிறது. எதிர்வரும் மே ஜூன் மாதத்தில் இதன் வாய்ப்பு என்ன என்பதை The National Oceanic and Atmospheric Administration இனால் ஓரளவு உறுதியாக கூறமுடியும். இப்போதைக்கு இது ஒரு எச்சரிக்கை மட்டுமே. ஆனால் இதற்கு நிறைய படிப்பினைகள் உள்ளன.

வழக்கமாக நாங்கள் அனைத்தையும் மறக்கும் இனம் டித்வா புயல் பற்றி அனைவரும் மறந்து விட்டோம் பெற்றோல் தட்டுப்பாடு பற்றி பேசி வருகின்றோம்.

இவற்றுக்கு எல்லாம் நிரந்தர தீர்வு
Renewable Energy காற்று சூரிய ஒளி மூலம் மின் தயாரிப்பு மின் சேமிப்பு BESS system, கிளிசிரிடியா கிளுவை மூலம் Biomass Power உற்பத்தி, குளங்களை ஆழப்படுத்தல் நதிநீர் இணைப்பு மேலாண்மை தெற்கின் நீரை தென்கிழக்கு கிழக்கு வடக்கு ஆகிய திசைகளில் கொண்டு செல்லும் பாரிய தேசியகால்வாய்கள், களனி மஹாவலி உயர் இணைப்பு நோர்டன்`. கினிகத்தேனி, கீழ் களனி கங்கை நீர்த்தேக்கம் (ருவான்வெல்ல), ரன்தம்பை நுவரெலியா கிரகரி நீர் உயர்த்தல் Hydro Electric Loop, Reservoir Battery System. Food System development, All weather விவசாயம் பாரிய Warehouse மற்றும் Cold storage. supply chain optimization. உணவு விலைகளை உறுதியாக்கல் இவை எல்லாம் ஒன்றோடு ஒன்று தொடர்பான தீர்வுகள்.

அதுபோலவே எல் நினோவும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய சிக்கலான காலநிலை பிரச்சனைகளை உருவாக்கும் 10,000 கிலோமீட்டருக்கு அப்பால் பசுபிக் சமுத்திரத்தில் நடக்கும் நிகழ்வுகள் எவ்வளவு எமது நாட்டில் தாக்கத்தை உருவாக்கும் என்பது புரிகிறதா?
இதற்கு நம்மால் தீர்வு காண முடியும் இலங்கையராக முதலில் நாம் ஒன்றுபட்டு சிந்திக்க வேண்டும் அப்போதுதான் தீர்வுகள் உருவாகும்.




நம்மில் பலர் இதை சர்வதேச பெண்கள் தினம் என்று மட்டுமே குறிப்பிடுகிறோம். ஆனால் அதன் முழுப் பொருள் "சர்வதேச உழைக்கும் பெண்கள் தினம்" என்பதே.

International Ladies Garment Workers Union நடத்திய வேலை நிறுத்தத்தின் ஆண்டு நினைவாகவே இந்த நாள் குறிக்கப்பட்டது. பெண்களின் பொருளாதார, அரசியல், சமூக உரிமைகளை அங்கீகரிக்கும் நாளாக இது கொண்டாடப் படுகிறது. ஆண்களிடமிருந்து பூங்கொத்துகளையும் சாக்லேட்டுகளையும் அன்பளிப்பாகப் பெறும் நாளாக சுருக்கிக் கொள்ள வேண்டிய நாள் அல்ல இது.

நம் சம உரிமைகளை சிந்தித்து மீள்பார்வை செய்ய வேண்டிய நாள் இது. நம் கருத்தைக் கூறும் உரிமை, உழைக்கும் உரிமை, சம்பாதித்த பணத்தை பயன்படுத்தும் உரிமை, எதை அணிய வேண்டும் என்பதைத் தேர்வு செய்யும் உரிமை, யாருடன் வாழ வேண்டும் , எப்படி வாழ வேண்டும் என்பதைத் தேர்வு செய்யும் உரிமை, குழந்தை பெற வேண்டுமா வேண்டாமா என்பதை தீர்மானிக்கும் உரிமை உள்ளிட்ட நம் உடலின் மீதான உரிமைகள் அனைத்தையும் மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ளவும், நம்மைச் சுற்றியுள்ளவர்களுடன் உரையாடவும் இந்த நாள் ஒரு தூண்டுதலாக இருக்க வேண்டும்.

உலக அரசியலில் போரின் அறிவிப்புகள் மிகவும் கவலைக்கிடமாக மாறிக் கொண்டிருக்கின்றன. ஆயுத பலங்களையும் அதனால் நிகழ்த்தப்படும் வீரதீர அழிவுகளையும் ரசிக்கும் இனம் அல்ல பெண்கள். போர்கள் மனித வாழ்வை எவ்வாறு சிதைத்து மறுவடிமைக்கும் என்பதை ஆழமாக அறிந்தவர்கள் நாம். போர்கள் நம் அரசியல், சமூக, பொருளாதார உரிமைகளை கணிசமாக மாற்றிவிடும். அது எங்கே நடந்தாலும், எவ்வளவு தொலைவில் நடந்தாலும்.

இங்கே ஒமஹாவில், நரம்புகளைத் தொடும் கடும் குளிரிலிருந்து சற்றே மீண்டு, மஞ்சள் ஒளியுடன் இன்றைய நாள் உதித்துள்ளது. உலக அரசியல், போரின் விளைவு நம்



ஒவ்வொருவரின் வாசல் வரை வந்துவிட்டது. பெட்ரோல் விலையுடன் அனைத்துப் பொருட்களின் விலைகளும் இரவிரவாக உயர்கின்றன. இத்தகைய சவாலான காலங்களில் தனிப் பெற்றோர்களின் நிலை மிகவும் கடினமானதாகிறது. உள்நாட்டுப் போர், இயற்கைப் பேரிடர்கள், கோவிட் தொற்று, இத்தகைய சிக்கலான காலங்களிலும் நான் ஒரு single mother ஆக இருந்தபோது அனுபவித்த துன்பங்கள் ஏராளம். இன்றும் நிலைமைகள் முழுமையாக மாறிவிட்டன என்று சொல்ல முடியாது.

வாழுமிடம் மட்டும் மாறியதால் நாம் முன்னேறியவர்களாகிவிட முடியாது. மனதில் ஆயிரம் கேள்விகளும் நிலையற்ற தன்மைகளின் தாக்கங்களும் உள்ளன. எனினும், இன்றைய ஞாயிற்றுக்கிழமை நேரத்தில் ஒரு சிறிய பகுதியை எனக்காக எடுத்துக் கொண்டேன். என் மனதை process செய்து reflect செய்ய, எனக்கே எனக்காக கொஞ்ச நேரம்.

சமீபத்திய ஒரு நேர்காணலில், பெண்கள் நாம் எப்போதும் தனியாக இருக்கவேண்டி வரும் என்பதை உணர்ந்தவர்களாக வேண்டும் என்று திரைக்கலைஞர் ராதிகா சொன்னதை நினைவுபடுத்திக் கொள்கிறேன். உண்மையில், நாம் தனியாக இருக்கிறோமா இல்லையா என்பதை விடவும் எளிதில் கைவிடப்படக்கூடியவர்களாக இருக்கிறோம் என்பதே உண்மை. எங்கே, எப்போது, யாரால் கைவிடப்பட்டாலும் எழுந்து நின்று கண்ணாடியில் நம் முகத்தைப் பார்த்து புன்னகைக்க முடிந்தால், அதற்கான காரணம் நாம் சமூக, அரசியல், பொருளாதார உரிமைகளை அனுபவிக்கும் இடத்தில் இருப்பதால்தான்.
சர்வதேச உழைக்கும் பெண்கள் தின வாழ்த்துகள்!

# நிறங்கள்



**மாலினி**

நாங்கள் இந்தக் கலர் பிறந்தநாள் கொண்டாடுறம் வரேக்குள்ள அந்தக்கலரில உடுப்புப் போட்டுக்கொண்டு வந்தீங்கள் எண்டால் சந்தோசம் அது இப்படித்தான் தொடங்கினதா ஞாபகம் பிறகு, அழைப்பிதழிலேயே இந்தக் கலர் உடுப்புப் போட்டுக்கொண்டு வாங்கோ என்ற அறிவித்தலாக, பின் அது ஒரு கட்டளை போல மாறத் தொடங்கிச்சு. பிறகு அது கலியாணவீட்டில பரவிச்சு. வழமையா, மணப்பெண்ணின் தோழிகள் flowergirls ஒரே நிறத்தில் ஒரேமாதிரி உடுப்புப் போட்டுச் செல்வது என்ற நிலை மாறி, கல்யாணத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டவர்களுக்கும் புடவைக்கான நிறம் பற்றின அறிவித்தல் கட்டளை சேர்த்தே கொடுக்கப்பட்டது.

அடுத்து அது வெள்ளை கிறிஸ்மஸ், சிவப்புக் கிறிஸ்மஸ், கருப்புக்கிறிஸ்மஸ், என உடையணிந்து கொண்டாடப்பட்டது.

கடற்கரைக்கோ, காட்டுக்கோ எங்கேனும் கூட்டமாகச் சிறு சுற்றுலா போகும்போது அதற்கெனவும் எல்லோருக்கும் ஒரு நிறத்தைத் தேர்ந்து அணிந்து கொண்டார்கள். சரிதான் போன இடத்தில் துலைஞ்சு போனால் கண்டு பிடிக்க வசதியாக இருக்குமெண்டு பாலர் வகுப்புக் குழந்தைகளுக்கு பள்ளி அடையாளத்தைப் பட்டி குத்தி அனுப்புறது போல, அல்லது மனநோயாளர் விடுதியில் இருப்பவர்களுக்கு,வெளியில் போகும் போதுதொலைந்து போனால் அடையாளம் காண இலகுவாக என ஒரே நிறம் அணிவிப்பது போல எண்டு அதை எடுத்துக் கொள்ளலாம்.

பிறகு, செத்த வீட்டு அறிவிப்பிலும் இந்த நிறம் அணிந்து வாருங்கள். இந்தப் பட்டி அணிந்து வாருங்கள், இந்த வகைப் பூங்கொத்துகளைக் கொண்டு வாருங்கள் என்ற அறிவித்தல்கள் வரத் தொடங்கின.
கடைசியா என்னவெண்டால் கோயிலுக்குப் போறதுக்கும் இப்ப கலர் ஒரு முக்கிய நிறமாப் போச்சு. எங்கட பதின்மத்தில கூடப்படிச்ச பெடியள் இருந்தாப்போல ஒழுங்கா கோயிலுக்குப் போனால், **"பக்தி கித்தி எண்டு பம்மாத்துப் பண்ணாதடா, கோயிலுக்குச் சாமி கும்பிடவா போனனி...? கலர் பாக்கத்தானேடா போனனி"** எண்டு அப்போது கேட்பம்.
அப்பவெல்லாம் எல்லாக் கலரும் எல்லாரும் போடலாம். கலர் எங்கட தெரிவு அப்போது. ஆனால் இப்பத்தான் கோயிலுக்கும் கலருக்கும் ஒரு தொடர்பே வந்திருக்கு. சொல்லப் போனால் நிறங்கள் வெளிப்படுத்துவது மனங்களை.
நிறங்களால் ஆள்பவர்கள் வெளிப்படுத்துவதும் தங்கள் மனங்களின் நிறங்களை.

நிறம் என்பது அவரவர் மனதுக்கேற்ப அவரவரது தெரிவு. ஒருவருக்கு மனச்சாந்தியைத் தரும் நிறம் இன்னொருவருக்கு மன இறுக்கத்தைத் தரும். சில நிறங்கள் பார்த்துக் கொண்டிருந்தாலே சிலருக்குத் தலைவலி வந்து விடும்.

நன்மை நிகழ்வுகளுக்குப் போவதும், துக்கம் விசாரிக்க, அஞ்சலி செலுத்தப் போவதும், கோவிலுக்குப் போவதும் எல்லாமே தனிப்பட ஒவ்வொருவரின் மன நிலையைப் பொறுத்தது. அவ்வவ் இடங்களுக்கான உடை, நிறத் தேர்வுகளும் அவரவருக்கு உடல் உள ரீதியாக வசதியான ஆடைகளையும் நிறத்தையும் தேர்வு செய்துஅணிந்து கொண்டால் மட்டுமே அந்தந்த இடங்களுக்கேற்ப அவர்கள் மனநிலையை இயங்க வைத்தல் இலகுவாக இருக்கும் என்பது ஒரு அடிப்படை மனித உளவியல்.

அப்படியிருக்கும்போது ஒவ்வொருவருக்குமான உடை-களை, நிறங்களை மற்றவர்கள் தெரிவு செய்து, தங்கள் வீட்டு நிகழ்வுகளுக்குக் கட்டளை போல அணிய வைத்துக் கூட்டத்தில் நிற்க வைக்கும் போது, அது கல்யாணமானாலும், பிறந்தநாளானாலும் மன

இறுக்கமற்று வாழ்த்தக் கூட முடியமா? ஒருவருக்கான உடையை, நிறத்தைத் தேர்வு செய்யும் உரிமையைப் பறித்துக் கொள்ளும் உரிமையை இன்னொருவர் தனதாக்கிக் கொள்வது என்ன நியாயம்.

ஒருவரின் மரணத்தில் இறுதி அஞ்சலிக்கு அவர் காலடியில் வைக்கும் பொருள் குறிப்பிட்டவருக்கும் அஞ்சலிப்பவருக்கும் மட்டுமேயறிந்த ஏதோவொரு அடையாளக் குறிப்பாகக் கூட இருக்கலாம். அதை இறுதியாய் அவர் காலடியில் வைத்து விடுதலின் மூலம் அந்தச் சோகம் இறக்கிவைக்கப் படலாம். அதைத் தடுத்து, இன்ன நிறம்தான், இன்ன பூதான், இன்ன அடையாள படிதான் என அலங்கரிக்கும் கலாச்சாரமானது வீடியோப்படம் பிடித்தலுக்குள் சிறைப்பட்டுப்போன மந்தை மனநிலையா?

கோவிலில் ஆண்டவன் சந்நிதியில் எம் மனக்குறைகளை இறக்கி வைப்பதற்கு எமக்கெதற்கு ஒரு யூனிபோர்ம். ஐரோப்பாவில், அமெரிக்காவில், அவுஸ்திரேலியாவில், ஏன் அந்தாட்டிக்காவில் என எந்தக் கண்டத்தில் இருப்பவர்களுக்கும் நினைத்தவுடன் புடவை வாங்குவதும் ஒரு முறை உடுத்ததை மீண்டும் உடுக்க மாட்டேன் என பழைய உடுப்புக் கொண்டேனாவில் போடுவதும் பெரிய விசயமில்லை.

இந்தக் கண்டங்களில தொடங்கிற கண்டறியாத விநோதங்களை மெல்ல மெல்ல பிறந்த நாட்டுக்குக் கடத்தும் போது, கோயிலுக்குப் போறதுக்கு ஒவ்வொரு திருவிழாவுக்கும் ஒவ்வொரு நிறத்தில சேலையைக் கொண்டு வா என நின்றால் ஒவ்வொரு குடும்பத்தின் நிலையும் என்னவாகும்..?, அந்த யூனிபோர்மைப் போட்டால் தான் ஐயர் பெயர் நட்சத்திரம் கேட்டு அரிச்சினை செய்வார் எண்டால் எந்தப் பெரிய ஒரு வேறுபாட்டைக் கோவிலுக்குள் சந்திக்க நேரும். மனப்பாரத்தை இறக்கி வைக்கப் போகுமிடத்திலிருந்து மனம் பெரிய ஒரு பாரத்தைச் சுமந்து கொண்டு வரும் நிலை தோன்றாதா. மனச்சாந்திக்காக என்று சொல்லப்படும் ஒரே இடத்தின் கதவுகளும் மனதுக்குள் மூடிக் கொள்ளாதா?.

வெளிநாட்டில உள்ள எல்லாரும் பெரும் அறிவாளியள் ஆனபடியால் அவையளுக்குப் புத்தி சொல்லுறதோ அவையளுக்காகக் கவலைப் படுறதோ இல்லை நான் சொல்வதின் நோக்கம். எனக்கு அந்தளவு அறிவுமில்லை. என்ர கவலையெல்லாம் நீங்கள் யூனிபோர்மைப் போட்டுக்கொண்டு அடிக்கிற கூத்தில இது என்ர வீடில்லையோ எண்டு பயந்து போய் கடவுள்மார் கோயிலை விட்டு ஓடப் போகீனம் எண்டது தான்.




ஓர் நாளில்
உங்கள்
வாழ்த்தும் வேண்டாம்.

பின்னான
அனைத்து நாட்களிலும்
உங்கள்
வசவும் வேண்டாம்.

முள்ளோ, கல்லோ
மலர் விரிப்போ
பாதை எதுவாக இருந்தாலும்
அவர்கள் பாதங்களாலேயே
கடந்தாகத்தான் வேண்டும்.
நீங்கள் சுமத்தி வைத்த
அனைத்தும் சுமந்த படி.

தெய்வம் என்றும்,
சிங்கப் பெண் என்றும்,
உங்கள்
பசப்பல்களை நிறுத்தி விட்டு
சற்றுச் சும்மாயிருங்கள்
அது போதும்.




காரணமின்றி பல நூறு குழந்தைகளை முதலில் கொன்று நாட்டின் உச்சத் தலைவரை தாம் கொன்றுவிட்டதாகக் கொக்கரிககும் போர் வெறியர்கள். இதில் ட்றம்பிற்கும் நெத்தனியாகோவிற்கும் மனிதகுலம் மன்னிப்பு வழங்கமுடியாது. எப்படி ஹிட்லரை மனிதகுலம் மன்னிக்கவில்லையோ அது போலவே நெத்தனியாகோவை நாம் பார்க்க முடியும். இவருக்கு எல்லா வகையிலும் அனுசரணையாக அமெரிக்க ஆளும் வர்க்கம் அதன் தலைவர் ட்றம்ப் செயற்படுகின்றார். காசாவில் இதனை விடவும் அதிகமான கொலைகள் நடைபெற்றன. அந்த நகரமே முழுமையாக அழிக்கப்பட்டது. பலஸ்தீனர்களின் அகவாழ்வு தொடர்கின்றது. ஏன் இந்த கொலை வெறி?, இதற்கு ஆதரவாக செயற்படும் எந்த உலக நாடுகளையும் மனித குலம் மன்னிக்காது.

வரலாறு முன்னோக்கி நகர்ந்து நூற்றாண்டுகள் கடந்தாலும் இவர்களுக்கான தண்டனை கிடைத்தாக வேண்டும். ஒரு நாட்டிற்குள் புகுந்து அதன் தலைவரை படுக்கையில் வைத்து தூக்கி வருவதை இந்த உலகம் எவ்வாறு அனுமதிகப் போகின்றது அதுதான் வெனிசுலாவில் நடந்தது. இந்நிலையில் ஈரான் மீதான தாக்குதலுக்கு நியாயம் கற்பிக்கும் அங்கு நடைபெற்ற இஸ்லாமிய அடிப்படைவாதம் மன்னர் ஆட்சியை அகற்றிய போது சமத்துவக் கருத்து பேசியவர்களை கொன்றார்கள் என்றாக சொல்லி இன்றைய கொலைகளை சமப்படுத்தும் போக்கு தற்போது பொருத்தம் அற்றது. எந்த யுத்தத்தையும் ஒடுக்கு முறையையும் நாம் ஆதரிக்க முடியாது. யுத்தம் அற்ற உலகம் எமக்கு தேவை. மனிதாபிமானம் மேல் ஓங்க வேண்டும். இந்த யுத்த சூழலில் இப்படியான எதிர்பார்ப்பா? ஈரானுக்கு அடி விழுவதை வரவேற்பதா?

உலகத்தின் பொருளாதாரத் தளம்பல்கள் செயற்கையாக ஏற்படுத்தப்படுவதும், சொத்துகள், லாபங்கள் ஓரிடத்தில் குவிக்கப்படுவதும் பெரும் சதவிகித மக்கள் வறுமைக்குள் வாழ்வதற்குரிய ஆதாரங்களை பெறமுடியாமல் போவதற்கு காரணமாக அமைகின்றன. இதில் அதானியும் அவர்களை தாங்கிப்பிடிக்கும் மோடியும் எலான் மஸ்கும் அவரை தாங்கிப்பிடிக்கும் அமெரிக்க முதலாளிவர்கமும் ஒன்றுதான். எண்ணை விலை ஏற்றம் அதனை தனதாக்கி ஏகபோகமாக்கல் தடுத்தல் என்பதால் உலகின் எல்லா நாடுகளும் அதன் விளிம்பு நிலை மக்களும் பொருட்களின் விலை ஏற்றம் என்பதாக வாழ்க்கைச் செலவை சமாளிக்க முடியாமல் திணறுகின்றனர். ஆனால் யுத்தம் தொடர்கின்றது. பல கோடி பணம் அதற்குள் கரியாகப்படுகின்றது

ஒரு நாட்டின் தலைவிதியை அந்த நாட்டு மக்களே தீர்மானிக்க முடியும் தீர்மானிக்க வேண்டும். இவ்வாறாகத்தான் தாக்குப் பிடிக்கின்றன தென் அமெரிக்க மத்திய அமெரிக்க நாடுகள். இதில் தென் ஆபிரிக்க நாடுகளும் இணைந்துள்ளன. ஒரே நம்பிக்கையாக உதாரணங்களாக நாம் இவற்றைக் கொள்ளலாம். புறப் பார்வைக்கு இந்நாடுகள் வறுமையானவை என்று டாலரில் கணக்கு கூறினாலும் அவர்கள் சுயமரியாதையுடன் நிறைவான வாழ்வை வாழுகின்றனர், வாழ விரும்புகின்றனர்.

தற்போதும் மிக நீண்ட காலமாக இல்லாமல் செய்ய துடிக்கும் கியூபாவையும் இவர்கள் விடுவதாக இல்லை. அவர்களின் பிரதான வருமானங்களில் ஒன்றான உல்லாசப் பயணத்தை முடக்க எண்ணையை முழுமையாகத் தடுத்து, விமான சேவைகள் நடத்த முடியாது உல்லாசப் பயணத் துறையை முடக்க முயலுகின்றனர்.

இதே அணுகு முறையை இலங்கையிலும் செய்யமாட்டார்கள் என்பதற்கு உத்தவாதம் ஏதும் இல்லை. எமது விளைச்சலும் அது சார்ந்த வாழ்வும்தான் ஓரளவிற்கு எம்மைக் காப்பாற்றலாம். ஆனால்ஒன்று "நாம்தான் போரை எப்போது நிறுத்துவது?" என்ற ஈரானின் அறை கூவலும் "நோன்பு காலத்தில் கூட இஸ்லாமியர்கள் அதனை கொண்டாட ஈரான் விடுதாக இல்லை. போர்நிறுத்தம் செய்யத் தயாரகவும் இல்லை" என்றான நெத்தனியாகோவின் ஆடு நனையுதென்று ஓநாய் அழுத கதையாக பிதற்றுவது சில செய்திகளை சொல்லி நிற்கின்றது. இது பல சாம்ராஜ்யங்கள் அழிந்த வரலாற்றை எமக்கு நினைவூட்டுகின்றன. இந்தப் பட்டியலில் சியோனிஸ்ட்டுகள் அமெரிக்க ஏகாதிபத்தியமும் தற்போது இணைந்து வருவதாகவே உணர முடிகின்றது. அதன் ஆரம்பமாக உணர முற்படும் கொலைகளே தற்போது நடைபெறுகின்றன.

**எமக்கு வேண்டும் அனைவரும் சமாதானமாக வாழும் சம வாழ்வு. அங்கு போர்களுக்கு இடம் இல்லை.**

# கிழக்கிலிருந்து இரண்டு கவிதைகள் –ஜமீல்–

**மனிதனை வரையும் ஆடைகள்**

விதம் விதமாக அணிந்திருக்கும்
ஆடைகளைக் கொண்டே
எல்லோரது உன்னதங்களையும்
எடை போடுகிறது காலம்
அங்கவீனமற்றிருந்தும்
சிலர் பிச்சையெடுத்து
பிழைப்போட்டுவதற்காகவே
பிய்ந்த ஆடைகளணிகின்றனர்

தான் படித்தவனென்று நிருபிக்கவே
வேறு சிலர் கோட் வட்டணிந்து
மேடைகளை அலங்கரிக்கின்றனர்

வேவ்வேறு நிறமாக ஒளிர்ந்தாலும்
மரங்களின் சீருடை இலைகள்தான்

அதற்காக இலைகளை கொண்டு
மரங்களின் ஒழுக்கத்தை
கணிப்பிடுதல் சாத்தியமா என்ன

சில கனிகள் இனிக்கின்றன
சில காய்கள் கசக்கின்றன
ஏன் சில விதைகளில்
விசம் கூட இருக்கின்றன

ஆனால் இங்கு அணிந்திருக்கும்
ஆடைகளை வைத்துத்தான்
அவர்களது தரத்தை
உடன் தீர்மானித்து விடுகிறோம்

என்ன செய்யலாம்
ஆடைகளைக் கொண்டு
சான்றோனென்று தீர்ப்பு வழங்கும்
தற்குறிகள் சஞ்சரிக்கும் மன்றில்
வாழ்ந்து தொலைத்துத்தான்
நமது இருப்பை
தக்கவைக்க வேண்டி நேரிடுகிறது

ஆனால் ஆடைகளால் ஒருத்தரது
நிர்வாணத்தை மட்டுமே
மறைக்க இயலுமே தவிர
அவர்களது அசில்களை
வரைந்து காட்ட முடியாது காண்

**சலிக்கா காற்று**

வழமை போன்று
இன்றும் எனக்கு முன்னர்
நூலகம் வந்திருந்தது காற்று

அது என்னை பத்திரிகை
வாசிக்க விடாமல்
தொந்தரவு புரியத் துவங்கியது

நான் வாசிக்கும் போது
அடுத்தடுத்த பக்கங்களை
என்னையும் மீறி புரட்டியது

பக்கங்கள் புரளாமல்
அழுத்திப் பிடிக்கம் போது
கோபத்தில் கிளித்து விடுகிறது

சில வேளை காற்று வடித்தனுப்பிய
கவிதைகள் பிரசுரமாகி இருக்குமா

அன்றி அதன் பூர்வீக வசிப்பிடமான
மரங்களின் வன்முறைகளுக்கு
எதிராக எழுதி அனுப்பிய
முறைப்பாடு வந்திருக்குமா

அப்படி என்னதான்
அடுத்த பக்கத்தில் இருக்கிறதோ

என்னை கடேசிவரை வாசிக்க விடா
கட்டற்ற காற்றை
எதுவுமே செய்ய முடியாமல்
இடை நடுவில் திரும்பி வருகிறேன்

சாலை மருங்கில் அமைதியாக
நின்று கொண்டிருந்த
மரத்தின் கிளைகளை பிடித்து
அசைத்துக் கொண்டிருந்தது

ஒரே பக்கத்தை
எத்தனை முறை புரட்டினாலும்
காற்றுக்கு சலிப்பதே இல்லை

# சிதைவுறும் நினைவில் பதிந்த முகங்கள்

-அவ்ரோடித் சுப்ரமணி-





நான் ராஜராஜசோழனைக் கண்டதில்லை. அவரது பெயரை யாராவது உச்சரித்தால் பட்டும் பீதாம்பரமும் இழைத்த ஆடையுடன் இடுப்பில் கைகளை ஊன்றிக் கர்ஜிக்கும், சிவாஜிகணேசன் நினைவில் வருவார். எனக்கு அவர் தான் ராஜராஜசோழன்.

கர்ணன் என்றாலும், தேர்க்காலில் சரிந்து கிடந்து மார்பில் தைத்த அம்பைப் பிடுங்கி இரத்தத்தால் தான்செய் தர்மங்களின் பலாபலங்கள் அனைத்தையும் தாரைவார்க்கும் வலியும் நிமிர்வுமாக சிவாஜிகணேசன் முகம்தான் நினைவில் வரும். எனக்கு அவர் தான் கர்ணன்.

“உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காதென்பது வல்லவன் வகுத்ததடா” என்று பாடிக்கொண்டு, கையில் சக்கரம் சுற்ற நீலவண்ண மேனியும் சிவந்த தடித்த உதடுகளும் திருட்டு அமர்த்தல் பார்வையுமாக நடந்து வந்த உருவம் தான் கிருஷ்ணன். அந்தக் காட்சியாலேயே இன்றுவரை கிருஷ்ணரை எனக்கும் பிடிப்பதில்லை. அது சிறுவயதில் மனதில் பதிவாகி இன்றுவரை அழியாமற்போன பிம்பங்கள்.

ஆக மூளை ஒரு செய்தியை உள்வாங்கும் போது கண்களால் பதிவாகும் சம்பந்தப்பட்ட காட்சியோடு இணைத்தே நம் ஞாபக அடுக்குகளில் சேகரம் செய்கிறது.

புராணமும், இதிகாசமுமாக ஏதேதோ கதாபாத்திரங்களுக்கு நாம் என்னென்னவோ கற்பனை வடிவங்கள் கொடுப்பதால் யாருக்கும் பெரிதாய் எந்தப் பாதிப்பும் ஏற்படப் போவதில்லை. நேற்று வரை எம் மத்தியில் இருந்தவர்கள், இன்று ஒரு செய்தியாகிப் போனார்களெனில், அதைக் கதையாக்கி, உங்கள் கதையின் பாத்திரங்களுக்கு AI மூலம் உங்கள், அல்லது அதன் அறிவுக்கு எட்டிய விதத்தில் வடிவம் கொடுத்துப் பகிரும் போது சம்பந்தப்பட்ட முகம் முற்றாகத் தொலைந்து போகிறது.

நீங்கள் வேண்டுமானால் சிறந்த ஊடகவியலாளராக, அதி சிறந்த அறிவாளியாக, youtube பிரபலமாக, தொழில்நுட்பப் புலியாக எதுவாக வேண்டுமானாலும் இருந்து விடுங்கள். ஆனால், நேற்று வரை கண்டு, நினைவில் பதிந்து போன முகங்களை, சடுதியாய் இழந்து, அந்த இழப்பும் அதிர்ச்சி தரும் அவலச் செய்தியாய் போன அதிர்விலிருந்து குறிப்பிட்டவர்களோடு சம்பந்தப்பட்டவர்கள் மீள்வதற்குள், செய்திகளைத் திரித்துக் கதையாக்கி, கதைகளை விரித்து அத்தியாயங்களாக்கி, கதா பாத்திரங்களுக்கு உங்கள் தொழில் நுட்ப அறிவின் மூலம் வடிவம் கொடுக்கும்போது, நேற்றுவரை உயிரோட்டமாய் நினைவில் பதிந்த மனித முகங்கள் நினைவுகளில் இருந்து கரைந்து விடுகின்றன. அவற்றிற்கு மாற்றாக Artificial Intelligence (A.I) உருவாக்கிய எவ்வகையிலுமே சம்பந்தமற்ற உருவங்களே பதிக்கப்பட்டு விடுகின்றன.

மொத்தத்தில், நம்மோடு வாழ்ந்து மறைந்து போனவர்கள் ஒரு புனைகதையாக, செய்தியாக உங்கள் செய்திகளில் சிக்கியவர்களாக, முகங்கள் கூட மறக்கடிக்கப்பட்டவர்களாக, நீங்கள் உருவாக்கும் கதாபாத்திரங்களின் முகமாகத்தான் நினைவுகளிலும், பதிவுகளிலும் பதியப்பட்டு விடுகிறார்கள். இது எவ்வகை நியாயம்?

முகம் என்ற பதத்துக்கு ஏராளம் அர்த்தமுண்டு. அதில் உளப்பூர்வமான அர்த்தம் என்னவெனில், இறந்த பின்னும், இழந்த பின்னும் ஒருவர் நினைவுகளாகக் கூடவே வருவது எமக்குப் பரிச்சயமான முக வடிவின் மூலமே. அதையும் உங்கள் அதி மேதாவித்தன, அறிவின் ஆர்வக்கோளாறின் மூலம் சிதைத்து விடாதீர்கள்.

வாழ்வில் சில அவல உணர்வுகள் புரிய வேண்டுமெனில் அவற்றுக்கு முகம் கொடுத்த அனுபவம் வர வேண்டும். யாருக்கும் எந்த அவலமும் அனுபவமாக இருந்து விட வேண்டாம். கேட்பதெல்லாம் சற்று மனச்சாட்சியுடன் மனிதர்களாகச் செயற்படுங்கள் அவ்வளவு தான்.

■



# யாழ்.தெய்வங்கள்!

-கவிதா லட்சுமி-

கோயில் என்றால் இப்போதும் என் நினைவுக்கு வருவது திருவிழாக் காலங்கள்தான். நான்கு வயது வரை எங்கள் குரும்பசிட்டி அம்மன் கோயில். அதன் அருகில் நின்ற ஆலமரம், வீதிகளெல்லாம் குவிந்திருக்கும் மக்கள் கூட்டம். எனது நான்கு வயதுக்கு அப்பால் நினைவில் நிற்பவை தமிழகத்தின் கரிசைக்காடு - அதிராம்பட்டினம் அருகில் தம்பிக்கோட்டையில் இருந்த கோயிலின் திருவிழாக்காலங்கள்.

திருவிழா நாட்களில் கோவிலை அண்டிய தெரு முழுவதும் குட்டிக்கடைகள் குவிந்து கிடக்கும். மாலை மணி-களில் இருந்து தின்பண்டங்கள் வரை அத்தனை பரபரப்பான காலங்கள். அந்நாட்களில் நான் வாங்கிய நரிப்பல் மாலை, ஆப்பிள் பலூன், நதியா தோடுகள் இன்றும் நினைவில் நிலைத்திருக்கின்றன. அவை அத்தனை கொண்டாட்டத்திற்குரியவையாக இருந்துள்ளன.

இப்போதும் யாழ்ப்பாணத்தில் கோயில்கள் பலவும் அழகோடும், புதியாய் நிறமடித்து புத்தம் புதிதாய்க் காட்சியளிக்கிறன. ஒரு ஊரிலேயே பல கோவில்கள். பாதைகள் திரும்பும் இடங்களில் எல்லாம் பெரிய பெரிய கோவில்கள். அனைத்தும் புதிதாய்ச் சீரமைக்கப்பட்டு சிங்காரித்து நிற்கின்றன. சில கோவில்களில் இன்னமும் சீரமைப்பு வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன.

மூலைக்கு மூலை கோவில்கள் தென்படுவதன் தேவை என்ன என்ற கேள்வி எனக்குள் வரத்தான் செய்தது. எப்படி இத்தனை கோயில்கள் வந்தன என்று பார்த்தபோதுதான் ஒரு விடயம் பிடிபட்டது. ஊர்களுக்குள் இருந்த சிறு குல தெய்வ வழிபாட்டுக் கோவில்கள் அனைத்தும், இன்று புலம்பெயர்ந்த மக்களாலும் அவர்களது நிதிவளங்களாலும் மீள் புனரமைக்கப்பட்டும் பெரும் கோவில்களாக எழுப்பப்பட்டும் நிற்கின்றன.

நான் அவதானித்த வரை பெரும்பான்மையான புலம்பெயர்ந்த மக்கள் தத்தமது கோவிற் திருவிழாக்களுக்கு இலங்கை செல்வதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றார்கள். பலர் கோயில் கட்டுமானங்களுக்கு என்று பெரும் பங்களிப்பு செய்வதை சேவையாக வைத்திருக்கின்றனர். தமது கோயில்கள் பெரிதாய் எழுப்பப்படுவதில் ஒரு அலாதி மகிழ்ச்சி அவர்களுக்கு. இப்போது, மூலைக்குமூலை கோயில்கள்.
ஆனால்...
இந்தக் கோயில்களில் எந்தப் பரபரப்பையும் காணவில்லை. மக்களைக் காணவில்லை. ஆங்காங்கே ஒவ்வொரு கோவில்களிலும் நாலைந்து பேர் தூரத்தே தென்படுகிறார்கள். சிறு தெய்வ, குலதெய்வ வழிபாடுகள் அழிந்து போயின, மக்கள் இல்லாத கோயில்கள், நிறங்களை அப்பிக்கிடந்தாலும் கலையிழந்து கிடக்கின்றன.
ஊருக்கு ஒரு கோயில் இருக்கும் போது அங்கு கூடுகின்ற மக்கள்திரள் இப்போது எந்தக் கோயில்களிலும் இல்லை. பாவம் கடவுள்களும் தனித்துவிட்டார்கள் போலத் தெரிகிறது. ஏதோ புலம் பெயர்ந்தவர்கள் தாம் தனித்து விரட்டியடிக்கப்பட்டதற்காகக் கடவுள்களைத் தண்டிப்பது போல இருக்கிறது.

பாவம் இந்தக் கோயில்களில் வீற்றிருக்கும் கடவுள்கள். அவர்களுக்கான சுதந்திரத்தை அவர்களே பெறமு-டியாமல் புலம்பெயர் தமிழ்களின் ஆர்வக்கோளாறுகளுக்குள் சிக்கிக்கிடக்கிறார்கள்.

# பாசி வளர்ப்பு:

## உயிரியல் ஊடுருவல் இதன் மிகப்பெரிய அபாயம்


தமயந்தி

Kappaphycus alwarezii என்கிற இந்த அயல்நாட்டுக் கடல்பாசி வளர்ப்பு 2005இல் இராமேஸ்வரம் பகுதியில் பெப்சி நிறுவனத்தால் அறிமுகமானது. தோழர் தமயந்தி குறிப்பிடுவது போலவே மீனவர்களுக்கு மாற்றுத்தொழிலாக முன்வைக்கப்பட்டது. பிறகு தமிழ் நாடு அரசால் தடை செய்யப்பட்டது. நாட்டுப்பாசிகளில் இதே பொருட்கள் உள்ளன. எமது இயற்கை வளங்களின் மீதான உயிரியல் ஊடுருவல் இதன் மிகப்பெரிய அபாயம் நாட்டுப்பாசிகளையும் பவளப்பாறை இனங்களையும் இவை அழித்துவிடும்

**பார்க்க: கடற்கரையைக் காவுகேட்கும் கப்பா:.பைகஸ்.**
**நூல்: அணியம்.**
**வறீதையா கான்ஸ்தந்தின். தமிழினி பதிப்பகம்.**
**தொடர்ந்து வாசிக்க, இதுபற்றிய தமயந்தியின் குறிப்பு ஒன்று கீழே தருகிறேன்.**
-பேராசிரியர் வறீதையா கான்ஸ்தந்தின்-

பன்னாட்டு நிறுவனமான "பெப்சி"யின் கடற்பாசி வளர்க்கும் திட்டம் இது மிகக் கேடான திட்டமாகும் எமது கடலில் இயற்கையாக விளைந்து, அனைத்து கடல்வாழ் உயிரினங்களுக்கும் சர்வபெரும் ஆதாரமாகத் திகழும் கடற்தாவரங்களை இந்த மரபணுமாற்றுப் பாசிவளர்ப்பு உற்பத்தியானது நிர்மூலமாக்கி விடும்
இவர்களின் வளர்ப்புப் பாசியில் உருவாகும் ஒருவகை வெளுப்புத் தொழுநோயானது எமது கடலிலுள்ள இயற்கைத் தாவரங்களுக்குத் தொற்றுவதால் அவை அழுகி அழிந்து விடும் அப்படி அழியும் இயற்கைத் தாவரங்கள் மீண்டும் ஆயுள்பரியந்தம் மீண்டும் உயிர் கொள்ளாது.

இந்தியாவின் பசுமைப் புரட்சியின் தந்தை எனச் சொல்லப் படும் எம். எஸ். சுவாமிநாதனின் செயற்கை விவசாயம் எப்படியெல்லாம் பாரம்பரிய விவசாயத்தை அழித்தது மட்டுமல்லாமல், விளைநிலங்களையும் நாசப் படுத்தியதோ அதே போன்றதோர் நடவடிக்கைதான் இது.

கடற்பாசியிலிருந்து பெறப்படும், "ஏகார்" மற்றும் "அல்ஜினிக்" அமிலம் போன்ற காபோவைதிரேற் பதார்த்தங்கள் எடுக்கப் படுகிறது. இவ்விரு பதார்த்தங்களும் கடற்பாசியைத் தவிர, இதுவரை வேறு எந்தத் தாவரங்களிலிருந்தும் பெறமுடியாதுள்ளது. கிடைத்தற்கரிய பதார்த்தங்களைத் தயாரிக்க உதவும் இவை, உலகமயமாதல் சந்தைக்கான பல மறைமுக வியாபாரத் தேவைகளை உள்ளடக்கிய பகற்கொள்ளைத் திட்டமாகும்

இலங்கை கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகர் ராமலிங்கம் அவர்கள் அபிவிருத்தி என்ற பெயரில் இந்த மோசமான திட்டத்தை வடபகுதிக் களக்கடல்களுக்குள் செயற்படுத்தத் தீவிரமாக செயற்பட்டு வருகின்றார். ஒருசில தினங்களுக்குமுன் ஊர்காவற்றுறை, மெலிஞ்சிமுனைக் கடல்களுக்குச் சென்று பார்வையிட்டுள்ளார். இவர் பார்வையிட்ட இடங்கள் அனைத்தும் எமது சிறுதொழிலாளர்கள் காலகாலமாகத் தமது பாரம்பரியத் தொழிலான களங்கண்டித் தொழில்கள் செய்து நாளந்த சீவியத்தை நகர்த்தும் இடங்களாகும்



இந்த இயற்கைவளம் இயல்பாகவே எமக்கு அள்ளித் தந்த மாபெரும் உயரிய கொடைகளை ஏற்கனவே கடலட்டைப் பண்ணைகள் என்ற பெயரால் ஏராளமாக நாசம் பண்ணியாயிற்று, அவை தொடர்ந்தும் நடந்து வருகின்ற நிலையில் இப்போ பெருமெடுப்பில் மரபணுமாற்றுக் கடற்பாசி வளர்ப்பும் முன்னெடுக்கப் படுகின்றது. இங்கே கடற்பாசிப் பண்ணைகள் நிறுவப்படுமாக இருந்தால் பல ஏழை மீனவர்களின் அன்றாட வாழ்வாதாரமும் இல்லாமற் போகும் இந்த நற்காரியத்தை கடற்தொழில் அமைச்சும், அரசும் மேற்கொள்கின்றன என்பதே நமது சாபக்கேடு.

"ஏகார்" எனப்படுகின்ற பதார்த்தம் சென்நிறக் கடற்பாசியிலும், "அல்ஜினிக்" அமிலம் கபிலநிறப் பாசியிலிருந்தும்



பெறப்படுகிறது. ஏகாருக்கான “கஞ்சிப்பாசி” என்றழைக்கப்படும் செந்நிறக் கடற்பாசி, கொட்டியாற்றுக் குடாவிலும், மூதூரிலும் ஏராளமாகக் கிடைக்கிறது. இங்கு இவை வைகாசி முதல் ஐப்பசி வரையும் தாராளமாக வளர்ந்து வருகிறது. இதில் முதல்தரமான கஞ்சிப்பாசி புத்தளம், கல்பிட்டி, மன்னார், மண்டைதீவு போன்ற பகுதிகளில் அதிகமாகக் காணப்படுகிறது. புத்தளத்தில் இது தைமாதம் முதல் வைகாசி வரையும் பெறவும் முடிகிறது.

உயர்ந்த வெப்ப நிலையில் திரவமாகவும், தாழ்ந்த வெப்ப நிலையில் திண்மமாகவும் இருக்கக்கூடிய ஒரு பதார்த்தமாக “ஏகார்” இருக்கிறது. இவை ஐஸ்கிறீம், மிட்டாய், ஜாம், புடிங், ஜெலி, யோக்கட் போன்ற பெரும் தயாரிப்புக்களில் தடிப்பாக்கியாகப் பயன்படுகிறது. இதை விட மதுபான உற்பத்தியில் தெளிவாக்கியாகவும், கடதாசி உற்பத்தியில் பளபளப்பாக்கியாகவும் திரவ நிலையிலும் பயன்பாடாகிறது.

மருத்துவத்துறையில், வயிற்றை இளக்கிவிடும் மருந்துப் பதார்த்தமாகவும், பல் கட்டுதலுக்கான அச்சுச் செய்கையின் கலவையாகவும், நாம் உண்ணும் மாத்திரைகளில் மேலுறைகளாகவும் (கவசமாகவும்) இதுவே பயன்படுகிறது. “அல்ஜினிக்” அமிலப் பதார்த்தத்தைக் கொண்ட கபிலநிறப் பாசிகள், அதிகளவில் பரம்பலடைந்து படர்கின்ற ஒரு பாசியினமாகும். இது புடவைக் கைத்தறி குடிசைத்தொழிலில் பருத்தித் துணி அச்சிடுவதற்கும், செயற்கை நார் தயாரிப்பில் தடிப்பாக்கியாகவும், “வார்னிஸ்” பூச்சுக்கள், மற்றும் ஒட்டும் - மினுக்கும் பதார்த்தமாவும் பாவிக்கப்பட்டும் வருகிறது. இந்த வியாபார உத்திகளின் பெரும் இலாபத்தை இலக்குவைத்தே இந்தப் பன்நாட்டு நிறுவனங்களான (பெப்சி)யும் தனது முதலீட்டுச் செல்வாக்கில், இதைத் தொண்டாக்கி இயங்கி வருகிறது.

வேலைவாய்ப்பு என்ற பெயரில் கொள்ளை இலாபமடிக்க இது நினைக்கின்றதேயொழிய, மக்களின் வறுமையைச் சீராகப் போக்கவோ மக்களுக்கு புரத உணவை பெற்றுக் கொடுக்கிற நல்ல எண்ணங்களிலோ இவர்களுக்கு நாட்டம் கிடையாது. இப்பொழுது கடற்பாசியில் இருந்து “பயோ” எரிபொருளை உருவாக்கலாம் என்பதைக் கண்டறிந்தபோதும் இவ்வுண்மையை மக்களுக்குச் சொல்லுவதும் கிடையாது. 50ஆம் ஆண்டிலிருந்து 60 மடங்கு பாசியுற்பத்தியை இத்தொண்டு நிறுவனங்களை வைத்தும் இவர்கள்



**கடற்தாமரை: கடலட்டை, கடற்பாசிப் பண்ணைகளால் அழிந்துபோகும் கடல் உயிரிகளில் ஒன்று**

சாதித்தும் உள்ளனர். கடற்பாசி உற்பத்தியானது ஆசிய, பசுபிக் கடல்களில் இருந்து 91 சதவீதம் கிடைக்கிறது. இது ஆண்டொன்றுக்கு 8 கோடி தொன்னாகவும் இருக்கிறது.

தமிழ் அரசியல்வாதிகள் என்ன செய்கிறார்கள்....? இவைபற்றிய இவர்களது அபிப்பிராயங்களோ, நடவடிக்கைகளோ என்ன...? ஒன்றும் கிடையாது. எவன் கொண்டுவந்து காசைக் கொடுத்தாலும் வாங்கிக்கொண்டு கடலையும், நிலத்தையும் தாரை வார்ப்பதிலேயே இந்தத் தமிழ் அரசியல்வாதிகள் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். சமூக அரசியல் அக்கறை கொண்டவர்களும், சமூகத்தின் மீதான தார்மீகப் பொறுப்புள்ள ஊடகங்களும், சுற்றுசசூழல், கடல்வளம் சார்ந்த அறிஞர்களும், புத்திஜீவிகளும் இத்தகைய மோசடித் திட்டங்களைச் சரியாக இனங்கண்டு மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதனூடாக அரசியல்வாதிகளின் இத்தகைய கொள்ளைகளை நிறுத்தப்பண்ண வேண்டும்.

**இன்னும் சில பிற்குறிப்பு:-**

இலங்கை இந்திய மீனவர் பிரச்சனைகளுக்குத் தீர்வெதுவும் காணாமல் திசை திருப்பும் நடவடிக்கையாகவும் இதனை நாம் பார்க்கவேண்டும். இந்திய இழுவைப்படகு முதலாளிகளுக்கு எமது கடலைத் தாரைவார்க்கும் திட்டம் இது என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. வடக்கு மீனவர்களை மீன் பிடிப்பதை விட்டுவிட்டு பன்னாட்டு நிறுவனங்களின் பாசி வளர்ப்போராக மாற்றும் நடவடிக்கையல்லவா இது?

ஏற்கனவே வடக்கில் நிலவும் கடலுணவுப் பற்றாக்குறையை நீக்க ஏனைய ஆசியநாடுகளிலிருந்து மாதாமாதம் பல்லாயிரம் டன் றின்மீன் இறக்குமதி செய்யப் பட்டுக் கொண்டிருக்கின்றது. போசாக்குக் குறைவால் குழந்தைகளும், கற்பிணித் தாய்மாரும் படும் அவலங்களை வடக்கு வைத்தியர்களைக் கேட்டால் சொல்வார்கள். தவிரவும் 40வயதைத் தாண்டியவர்களுக்கு கல்சியம் பற்றாக்குறை பெருமளவில் தோன்றியுள்ளது.

எல்லாப் பக்கமும் அரசியல் வாதிகளும் பெரு முதலாளி-களும் தமது லாபத்தை நோக்காகக் கொண்டு மக்களை வஞ்சித்து வருகிறார்கள் என்பதற்கு இப்படி பல்லாயிரம் எடுத்துக்காட்டுக்கள் நடக்கின்றன.

# மண்டைதீவு ஈரநிலம்: அபிவிருத்தியின் பெயரில் தற்கொலை

## யாழ்ப்பாணத்தின் மூச்சுக்காற்று ஆபத்தில்



-குமணன்-




யாழ்ப்பாணத்தின் பசுமை வளங்கள் மெல்ல மெல்ல அழிந்து வருவதில் இன்னொரு அத்தியாயம் தொடங்கியிருக்கிறது. யாழ் மாநகரத்துக்கு அருகிலுள்ள மிகப் பெறுமதியான நிலப்பகுதியான மண்டைதீவில் நிர்மாணிக்கப்படவுள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானம், ஒரு பக்கத்தில் யாழ்பாணத்தவர்களுக்கு பெருமையையும், மறுபக்கத்தில் ஆழ்ந்த சுற்றுச்சூழல் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த வருடம் செப்டம்பர் மாதத்தில் ஸ்ரீலங்கா ஜனாதிபதி அனுரகுமார மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் மைதானத்-திற்கான அடிக்கல் நாட்டினார். 7.6 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்ட இத்தீவு, “Sports City” எனப்படும் பெரிய அபிவிருத்தித் திட்டத்தின் ஒரு பகுதியாகும்

ஸ்ரீலங்கா கிரிக்கட் நிறுவனம் மேற்கொள்ளும் இந்தத் திட்டம், 40,000 பார்வையாளர்கள் அமரக்கூடிய சர்வதேச தரமுடைய மைதானத்தை வடக்கு மாகாணம் பெறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது எனக் கூறப்படுகிறது. இதன் விளைவாக, மண்டைதீவைச் சூழ ஹோட்டல்கள், வீதிகள், உணவகங்கள், தங்குமிடங்கள் போன்ற பல மேலதிக அபிவிருத்திகளும் உருவாகும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் இந்தத் திட்டம் மண்டைதீவின் உயிரியல் சம நிலையை சீர்குலைக்கும் என்றும் எச்சரிக்கின்றனர்.

மண்டைதீவு, யாழ்ப்பாணத்தின் கடல்நீரேரி அமைப்பின் ஒரு பகுதியாக விளங்குவதுடன், இங்கு கண்டல் காடுகள், கடல் புல்வெளிகள், உப்பு நிலங்கள் மற்றும் சதுப்பு நிலங்கள் போன்ற பல முக்கிய இயற்கை அமைப்புகள் காணப்படுகின்றன. இவை “Blue Carbon Ecosystem” எனப் பெயர் பெற்றவை கார்பன் உறிஞ்சல், காலநிலை பாதுகாப்பு, மீன்வளம் மற்றும் உயிரின இனப்பெருக்கம் போன்ற அம்சங்களுக்கு அடிப்படை ஆதாரங்கள் ஆகின்றன. இப்பகுதியின் கண்டல் காடுகள் மற்றும் உப்பு நிலங்கள் கார்பன் மற்றும் மீத்தேன் வாயுக்களை கட்டுப்படுத்தி, காலநிலை பாதுகாப்பில் மிகப் பெரிய பங்காற்றுகின்றன. கடல்வாழ் உயிரினங்களான மீன், இறால், நண்டு போன்றவை இங்குள்ள கண்டல் காடுகளில் அதிகமான இனப்பெருக்கம் செய்கின்றன. இதனைச்சுற்றிய கடல்வாழ் கிராமங்களின் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இதேவளத்தையே வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர்.

மேலும், இந்த ஈரநிலங்கள் நவம்பர் முதல் ஏப்ரல் வரையிலான காலத்தில் பல வலசைப் பறவைகளின் தங்கும் தளம் என்பதால் உயிரின வளம் மிகுந்த சூழல் அமைப்பாகவும் விளங்குகின்றன. மழைக்காலங்களில் யாழ் நகரிலிருந்தும் அருகிலுள்ள தீவுகளிலிருந்தும் வெளிப்படும் வெள்ளநீரை உறிஞ்சி, வெள்ளத்தைக் கட்டுப்படுத்தும் இயற்கை தடுப்பணையாக இது செயல்படுகிறது.

சுற்றுச்சூழலுக்குப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய எந்தக் கட்டுமானமும் முன்னதாக சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (EIA) மூலம் அனுமதி பெறவேண்டும். ஆனால்






மண்டைதீவில் நடைபெறும் இந்த மைதானத் திட்டம் எந்த முழுமையான EIA ஆய்வும் இன்றி ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கிறது. யாழ்ப்பாணத்தில் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளில் எவரும் இதற்கெதிராக உறுதியான நிலைப்பாடு எடுத்ததாகத் தெரியவில்லை. மாறாக, இதை “வடக்கில் வரலாற்று முக்கியத்துவமுள்ள அபிவிருத்தி” என சித்தரித்து சமூக வலைத்தளங்களில் பிரசாரம் செய்து வருகின்றனர்.

இதே சமயம், தெற்கிலுள்ள சுற்றுச்சூழல் அமைப்புகள் மற்றும் உள்ளூர் ஆர்வலர்கள் அளித்த அழுத்தத்தின் காரணமாக Central Environmental Authority (CEA) *2026* பிப்ரவரி மாதத்தில் இத்திட்டத்தை தற்காலிகமாக நிறுத்தியிருந்தாலும், இதன்பின்னரும் கட்டுமானப்பணிகள் தொடர்ந்துவருகின்றது. 52முதல் 138ஏக்கர்வரை ஈரநிலங்கள் நிரப்பப்படும் இத்திட்டம், மண்டைதீவின் இயற்கை அமைப்பைத் தீவிரமாகக் குலைப்பதாக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதனால் கண்டல் காடுகள் மற்றும் கடல் புல்வெளிகள் அழிவு, மீன்வளம் மற்றும் பறவைகள் வாழிட இழப்பு, ஒக்சியன் அளவு குறைதல் மற்றும் கார்பன் வெளியேற்றம் அதிகரித்தல், வெள்ள அபாயம் மற்றும் மாசு உயர்வு, எனும் பாதிப்புகள் தவிர்க்கமுடியாதவையாக மாறும். யாழ்ப்பாணம் ஏற்கனவே பல சூழல் சவால்களைச் சந்தித்து வருகிறது. நிலத்தடி நீர் குறைவு, உப்பு நீர் ஊடுருவல், விவசாய நிலப் பாதிப்பு, கடற்கரை சேதம், மேலும் பிளாஸ்டிக்



மற்றும் இரசாயனக் கழிவுகள் அதிகரித்து கடல்நீரேரிகளை பாதித்துள்ளன. இந்த நிலையில் மண்டைதீவின் ஈரநிலத்தை நிரப்பி மைதானம் அமைப்பது, இப்பகுதியின் இயற்கை பாதுகாப்பைச் சிதைத்து, மீட்க முடியாத பாதைக்கு இட்டுச் செல்லும் யாழ்ப்பாணத்தில் கிரிக்கெட் வளர்ச்சியும் அவசியம் தான். ஆனால் அபிவிருத்தி இயற்கையை அழித்துச் செய்வது அல்ல அதைத் தழுவியே வளரச் செய்வதே உண்மையான முன்னேற்றம் மண்டைதீவு மைதானத் திட்டத்துக்கான முழு-மையான EIA ஆய்வு உடனடியாக மேற்கொள்ளப்படுதல் அவசியமானது. அத்துடன், அப்பகுதியில் வாழும் மக்களின் கருத்து, அனுபவம், வாழ்வாதாரம் ஆகியவற்றுக்குப் பிரதான இடம் வழங்கப்பட வேண்டும் இயற்கை பாதுகாப்பும் விளையாட்டு வளர்ச்சியும் இணைந்திருக்கும் வகையில் மாற்று இடம் தேர்வு செய்யப்படுவது மட்டுமே நீடித்த தீர்வாகும்

மண்டைதீவின் ஈரநிலங்கள் யாழ்ப்பாணத்தின் மூச்சுக்காற்றும், வெள்ளத்தைக் கட்டுப்படுத்தும் கவசமும் ஆகும் இன்றே எடுக்கப்படும் முடிவு நாளைய யாழ்ப்பாணத்தின் இயற்கை நிலையை நிர்ணயிக்கும்

ஒரு மைதானம் எங்குவேண்டுமானாலும் அமைக்கலாம் ஆனால் இந்த ஈரநிலத்தை மீண்டும் உருவாக்கிவிடமுடியாது. ▪




**ஈழத்து மீனவன் - அஞ்சலோ அருண் (Sea Prince) யாழ்ப்பாணம் பாசையூரை பூர்வீகமாகவும், மூன்றாம் பிட்டி (மாந்தை மேற்குப் பிரதேசசபை) வாழ்விடமாகவும் கொண்டவர். கடலின் அழகான மொழியை சமூக ஊடகங்கள் வாயிலாகப் பேசி வருபவர். கடல் உயிரிகள் பற்றிய ஏராளமான தகவல்களை தொடர்ந்து சமூகத்துக்குச் சொல்லி வருபவர்.**

**ச**மகால பலவேறு வகைகளிலான சமூக ஊடகங்கள், இலகுவான இணையத் தளங்களால் உலகளாவிய ரீதியில் ஏராளமான நன்மைகள் நடந்து கொண்டிருக்கின்ற அதேவேளை பலவேறு வகைகளில் தீமைகளும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. கணப்பொழுதில் தகவல்களை சர்வதேச அளவில் பரிமாற்றம் செய்து கொள்வதற்கான வாய்ப்புக்களை இலகு படுத்தித் தந்துள்ள சமூக ஊடகங்கள் மறுபுறத்தில் போலியான செய்திகளையும், வதந்திகளையும் பரப்பி மக்களைக் குழப்பி வருகின்றன. இவற்றுள் பிரதான பங்கு வகிப்பவை YouTube, Facebook, Whatsapp போன்ற தகவற் தொடர்பு சாதனங்களாகும்.

ஒரு யுரியூப் தளமோ, அல்லது முகநூல் முகவரியோ இருந்தாற் போதும் யாரும் ஊடகவியலாளர் ஆகலாம், யாரும் அரசியல் ஆய்வாளர் ஆகலாம், யாரும் எழுத்தாளர் ஆகலாம் என்ற நிலை வந்து விட்டது. போதாக்குறைக்கு தற்போது மிகப்பெரும் அசுர பாய்ச்சலாக AI (Artificial intelligence - செயற்கை நுண்ணறிவு) தொழில் நுட்பமானது அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இது அடுத்த உலகமகா யுத்தங்களை வழி நடத்துகின்ற அளவில் வந்து நிற்கின்றது.

மேற்கூறப்பட்ட தகவற் தொடர்பு சாதனங்களையும், தொழில் நுட்பங்களையும் கருத்திற் கொண்டு நீண்டகாலமாக எனக்கிருந்த ஒரு அவா இப்போதுதான் ஓரளவு நிறைவேறிக் கொண்டிருக்கின்றது. அதனை தாயகத்தில் நிறைவேற்றிக் கொண்டிருப்பது நமது நேசத்துக்குரிய கடலவன் அஞ்சலோ அருண் என்ற இளைஞன்.

யுத்தத்துக்குப் பின்னான காலங்களில்கூட எமது தமிழ் அரசியல் வாதிகளும்சரி, தமிழ்த்தேசியம் பேசுபவர்களும்சரி, மக்களும்சரி எமது கடல் வளங்கள் பற்றிய அக்கறையோ, கரிசனையோ, விழிப்புணர்வோ இல்லாமற்தான் இருந்து வருகிறார்கள் என்ற கசப்பானதும் அழுத்தமானதுமான உண்மையை நாம் வெட்கட்தோடும், கவலையோடும் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும்.




இந்திய இழுவைமடிப் படகில் அடிபட்டு நெஞ்சில் பலத்த காயங்களுடன் சுமார் 50வயதான ஆமையைக் காப்பாற்றி மீண்டும் கடலுக்குள் அனுப்புதல்.



யாழ்ப்பாணத்து நீலக்கால் நண்டுதான் திறமானது என்று அதிக விலைக்கு விற்பனை செய்யும் நண்டு முதலாளிகளின் பொய்யை உடைத்தல்.



8,10ஆயிரம் ரூபாய்க்கு விற்கமுடியும் என்றாலும், லட்சக்கணக்கான முட்டைகளை வயிற்றில் தாங்கியிருக்கும் பெருநண்டை மீண்டும் கடலுக்குள் விடும் உயரிய கரிசனை.



7, 8 வயதுடைய இளம் ஆமையை மீண்டும் கடலுக்குள் விட்டுவிடும் உயிரியல் அக்கறை



20கிலோவுக்கும் மேற்பட்ட மூர்க்கமான முண்டன் சுறாவை மிக லாவகமாகக் கையாளும் அருணுடைய நுட்பம். இது கடலில் மிகவும் அபாயமானது. முண்டஞ்சுறா, வெள்ளைச் சுறா, பெருவஞ்சுறா (The great white shark) என்ற பெயர்களால் அழைக்கப் படுகிறது.

கடல் என்றால் அவரவர் "சோத்துப் பீங்கானுக்குள்" கயல்மீன் குழம்பும், ஒட்டிப் பொரிச்சமீனும், திரளிச் சொதியும் இருந்தால் போதும், அதற்கு மட்டும்தான் கடல் என்ற கணக்காகவும், கடற்பிரச்சனை என்றால் அது கரையோரத்தில் இருக்கின்ற சில சாதியினருடைய பிரச்சனை மட்டும்தான் என்பது போலவுமே இருந்து வருகிறார்கள். "கடலையும் பனையையும் சாதியாகப் பார்த்துப் பழக்கப்பட்ட யாழ்ப்பாணத்தார்" என எனது பல பதிவுகளில் அழுத்தம் திருத்தமாகச் சொல்லி வந்துள்ளேன். இன்றுவரை உண்மையும் அதுதானே...!

கடல் என்பது எமது மிகப்பெரும் வளம். கடல் என்பது எமது தேசத்தின் மிகப்பெரும் பொருளாதாரம். கடலென்பது தமிழ்த்தேசியத்தின், அல்லது இலங்கைத் தீவின் பொருளாதார முதுகெலும்பு. கடல் என்பதும் சேர்ந்ததுதான் எமது தேசம், கடலின்றி அமையாது உலகு என்பதுபோல இலங்கை என்றாலும், ஈழம் என்றாலும் கடல் என்பது இன்றியமையாத மிகப் பிரதானமான வளம். இயற்கை எமக்கு இயல்பாகவே அள்ளித் தந்த வரம். அப்படியான கடல் வளங்களை நாம் இன்று எப்படிப் பார்க்கிறோம்..? எப்படி அணுகுகின்றோம்..?, அவற்றைப் பாதுகாக்க வேண்டியது நமது இன்றியமையாத கடப்பாடு என்பதைப் புரிந்து கொண்டுள்ளோமா...? உண்மையைச் சொன்னால்..., "இல்லை" என்பது மட்டும்தான் விடையாக இருக்கின்றது.

கடந்த 15 வருடங்களாக எனது இருப்பானது ஆறு மாதங்கள் தாயகத்திலும், ஆறு மாதங்கள் நோர்வேயிலுமாகவே நகர்ந்து செல்கின்றது. தாயகத்தில் வசிக்கும் காலங்களிலான எனது அவதானிப்பானது "எமது கடல் வளங்கள் பற்றிய தெளிவான விழிப்புணர்வுகளை மக்களுக்கு மட்டுமல்ல, அரசுக்கும் அரசியல்வாதிகளுக்கும் ஏற்படுத்த வேண்டும்" என்பதுதான்.

அந்த வகையில் தற்போதுள்ள சமூக ஊடகங்களின் துணையோடு எமது கடல் வளங்கள் பற்றிய தகவல்களை மக்களுக்குள் முடிந்தளவு கொண்டு செல்ல வேண்டும் எனும் எண்ணம் கடந்த 15 வருடங்களாக நினைத்துக் கொண்டிருந்தேன். முடிந்தளவு தகவல்களையும், தரவுகளையும் முக நூலிலும், தேன் தமிழிதழ் மூலமாகவும், படைப்பிலக்கியங்கள் வழியாகவும் பதிவு செய்து வருகின்றேன். ஆனாலும் இவை போதாது. ஆனைப்பசிக்கு சோளப்பொரி என்பது போலத்தான்.

அதேவேளை கடந்த 10, 15வருட காலங்களாகத் தமிழகத்திலிருந்து சில சமூக வலைஞர்கள் கடல் பற்றிய பதிவுகளை செய்து வருகின்றார்கள். "உங்கள் மீனவன், நாகை மீனவன், கடல்ராசா, உங்கள் மீனவன் நெல்லை, உங்கள் மீனவன் மூக்கையூர், மீனவன் கடல் வீரன்..." எனப் பல தனி நபர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி வருகின்றார்கள் ஆனாலும் இங்கே எமக்குள்ள முரண் என்னவென்றால், அனைத்து இந்திய கடல்வளப் பதிவர்களும் கடலுக்கும், கடல் வளங்களுக்கும் விரோதமான தொழில் முறைகளை எந்தவிதக் குற்ற உணர்வும், புரிதலும் இல்லாமலேயே பதிவு செய்து வருகின்றார்கள்.

உதாரணமாக, கடலுக்கு மிகமிக விரோதமானதும், சட்ட விரோதமானதுமான நாசகார இழுவைமடிப் படகுகளின் மீன்பிடியைப் பெருமையோடு பதிவு செய்து வருகின்றார்கள். உண்மையாகவே கடலை நேசிப்பவர்களால் இத்தகை நாசகாரத் தொழில்கள் பற்றிய பதிவுகளைப் பெருமையோடு பதிவு செய்ய முடியாது. மாறாக இயற்கை வளங்களுக்கு முற்றிலும் விரோதமான இத்தகைய தொழில்முறைகளை விமர்சித்தும், கண்டித்தும்தான் பதிவு செய்ய முடியும் இந்தத் தெளிவும், புரிந்துணர்வும் இத்தகை பதிவர்கள் எவரிடமும் இல்லை.

இத்தகைய சமூக ஊடகப் பதிவர்களுக்கெல்லாம் மாறாகவும், கடல் பற்றிய தெளிவான புரிந்துணர்வோடும், கடல் மீதான அப்பளுக்கற்ற நேசத்தோடும் அண்மைக் காலமாக எமது தாயகத்திலிருந்து செயற் பட்டுக் கொண்டிருக்கும் கடலின் மகனார் ஒருவர் பற்றிய அறிமுகமே இந்தப் பதிவின் நோக்கமாகும்.

மூன்றாம் பிட்டி. மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்குப் பிரதேச சபைக்குள் கவனிப்பாரற்றுக் கட்டுண்டு கிடக்கும் ஒரு மீன்பிடிக் கிராமம். இங்கு பாரம்பரிய மீன்பிடித் தொழிலான களங்கண்டித் தொழில் செய்து கொண்டிருக்கும் இளைஞன் தான் அஞ்சலோ அருண். அன்றாடம் கடலுக்குச் சென்று தொழில் செய்வது மட்டுமல்லாது, தான் கடலில் பிடிக்கும் அரியவகை கடல் உயிரிகளை ஒளிப்பதிவாக்கி, தனது கைக்கெட்டிய வரையான சமூகப் பொதுவெளிகளில் பதிவு செய்து வருகின்றார்.

இவரது பதிவுகள் சாதாரணமாகக் கடந்து செல்லும் படியானவைகள் அல்ல. சமூகப் பொறுப்புணர்வுள்ள பதிவுகள். கடல் வளங்கள் மீதான அளப்பரிய அக்கறை கொண்ட பதிவுகள். கடலின் மகனார் ஒருவன் தனது கடற்தாய்க்கு என்ன பணி செய்ய முடியுமோ அதனை தன்னளவிலான கடமையைச் செய்யும் ஒரு கடல் புத்திரன்.

தொடர்ந்து தினமும் இவரது பதிவுகளை அவதானித்து வந்த நான் இவரோடு நேரடியாகத் தொடர்பு கொண்டு சில கேள்விகளைக் கேட்டேன். அந்த உரையாடலின் சிறு பகுதியை இங்கே தருகின்றேன்.



முண்டன் சுறாவின் வேட்டை வாயிலிருந்து படுகாயங்களோடு தப்பித்த இளம் கருங்கண்ணிப் பாரை.(கருக்குவால்ப் பாரை)

“இப்படியான பதிவுகளைச் செய்ய வேண்டும் என உங்களுக்கு எப்படி உணர்வு வந்தது?”

“அண்ண, எனக்கு எனது தாய் எப்படி முக்கியமோ அப்படித்தான் என்னை சோறூட்டி வளர்க்கும் கடலும். எனது தாயைப்பற்றி நான் சொல்லாமல் வேறு யார் சொல்வது?”

“சரி தம்பி, உங்கள் தொழிலில் அகப்படும் மிக விலை உயர்ந்த ஆமை, நாவடம், சினை நண்டு, கடற்குதிரை போன்றவற்றையும் அப்படியே கடலில் உயிரோடு விடுகிறீர்களே, அது ஏன்...?”

“அண்ண, எனக்கு எனது கடற்தாய் தேவையானதைத் தருகிறாள். அதேவேளை எனது கடலின் மடியில் உள்ள எல்லா உயிரினங்களையும் கொன்றுதான் நான் சோறு சாப்பிட வேண்டும் என்ற அவசியம் இல்லை. எனக்கு எது தேவையோ அதை மட்டும் நான் கடலிடமிருந்து எடுத்துக் கொள்கிறேன். கடலுக்குத் தேவையானதை நான் கடலுக்கே மீண்டும் கொடுத்து விடுகின்றேன். இதில் நான் என்ன தவறு செய்கிறேன் சொல்லுங்கள்?”

முகத்தில் அறைந்தாற்போல் அருணின் கேள்விகளுக்கு என்னிடம் யாதொரு பதிலும் இல்லை. போதைப் பொருட்களுக்கு அடிமைப்பட்டுப்போன ஒரு தமிழ்த் தலைமுறையின் மத்தியில் இருந்து இப்படி ஒருத்தனா...? அதுவும் கடல் வளங்களை அதீதமாக நேசிக்கும் ஒருத்தனா...? ஆம், நீங்கள் நம்பித்தான் ஆக வேண்டும்.



கருக்குவால்ப் பாரை. கருங்கண்ணிப் பாரையின் இளம்பருவம் சுவையானது.

சினிமாத் தனமற்ற, பாசாங்கற்ற, தன்னலம் கருதாத நமது தேசத்தின் ஒரு கடல் மைந்தன் செயற்பட்டு வருகின்றான். அவனை நாம் வரவேற்பதும், ஆதரிப்பதும், உறுதுணையாக இருப்பதும், அவனுக்கு பலம் சேர்ப்பதும் நமது கடமைதானே மக்களே...?!

எனது “ஏழு கடற்கன்னிகள்” என்ற சிறுகதைத் தொகுப்பில் “அப்பு” என்றொரு பாத்திரம் வரும். அவருக்கும் அவரது பேரனாருக்கும் வலையில் ஒரேயொரு சுறா மட்டுமே அகப்படும். அந்த சுறாவை மீண்டும் கடலில் விடும்படி அப்பு சொல்வார். ஆனால் பேரனாருக்கு விருப்பமில்லை. அப்போது அப்பு சொல்வார்... “மகனே இந்த சுறாவின் வயிற்றில் ஏழெட்டுக் குட்டிகள் இருக்கின்றன, ஆகவே நாம் அதனைக் கொல்ல முடியாது. அப்படியே உயிரோடு கடலில் விட்டுவிடு” என்பார். இதுதான் கடலைத் தாயாக நேசிக்கும் உண்மையான மீனவன்.

இதனைக் கதையில் கேட்க நம்ப முடியாமல்தான் இருக்கும். ஆனால் இதனையே தனது அன்றாட கடற்தொழிலில் ஒருவன் இயல்பாகவே செய்து கொண்டிருக்கிறான் என்றால்..., அதுதான் இந்தப் பதிவை எழுத வைத்த மூறாம்பிட்டி **Sea Prince** அஞ்சலோ அருண்.



செங்கடாய்ப் பாரை- மஞ்சள்ப் பாரை



ஓட்டுக் கணவாய், பீலிக் கணவாய்- வித்தியாசங்களும் தன்மைகளும்.



அதிக சுவையான பூவாய்த் திருக்கையின் அதிக விஷமான முட்கள்







அருணின் "ஈழத்து மீனவன்" - முகநூல்

அஞ்சலோ அருணின் பூர்வீகம் யாழ்பாஷையூர். இவரது தந்தையாரின் பாரம்பரிய கடற் தொழிலான களங்கண்டிப் பாடுகளை இவரே தொடர்ந்து மூன்றாம்பிட்டியில் செய்து வருகின்றார். ஆனாலும் கடல் மீதான தனது நேசத்தையும், கடல் வளங்கள் மீதான அக்கறையையும் இவரது பதிவு-களின் மூலம் நாம் காணலாம். தவிரவும், இந்தப் பதிவுகளின் மூலமாக கடல் வளங்கள், கடல் உயிரிகள், கடலுணவு பற்றிய விபரணைகளை எல்லோருக்கும் விளங்கும் வகையில் மிகவும் எளிமையாகவும், அழகாகவும் செய்து வருகின்றார். மிகப்பெரும் மீன்பிடி வளங்களைக் கொண்ட வடபகுதி மக்களுக்கு தாம் அன்றாடம் சாப்பிடும் மீன்வகைகளின் பெயர் விபரங்கள், அவை ஒவ்வொரு வகையிலும் உள்ள புரதம், ஊட்டச்சத்து என்ன என்று கேட்டால் விடை கவலைக்கு இடமானதுதான். பாரை, விளை, கயல், திரளி, நகரை, பாலை, முரல், சீலா என சில குறிப்பிட்ட பெயர்களைத் தவிர வேறெதையும் தெரிந்து வைத்துக் கொள்ளவதில்லை.

நமது தேசத்தின் கடல் வளங்களையும், அதன் சுற்றுச் சூழலையும் நாமேதான் சீரழித்தும், மாசுபடுத்தியும் வருகின்றோம். யாழ்ப்பாண பஸ் நிலையத்திலிருந்தும், யாழ்.வைத்தியசாலையிலிருந்தும், நகரத்திலுள்ள சாப்பாட்டுக் கடைகளில் இருந்து வீசப்படும் தண்ணீர்ப் போத்தல்களும், குளிர்பானப் போத்தல்களும் குறைந்தபட்சம் தினமும் 15-20ஆயிரத்துக்கும் குறையாமல் கிட்டங்கி, குருநகர், பண்ணை கடலுக்குள்தான் சென்று சேர்கின்றன. இவை பற்றிய அக்கறையோ, விழிப்புணர்வோ நமது மக்களுக்கு அறவே இல்லை என்பதுதான் உண்மை. இந்தக் கசப்பான உண்மைகள் எதனைக் காட்டுகிறது என்றால் நமது மக்கள் கடலிடமிருந்து அன்னியப்பட்டே இருக்கிறார்கள் என்பதைத்தான்.

போதாக்குறைக்கு கடலட்டைப் பண்ணைகளின் ஆக்கிரமிப்பால் யாழ்ப்பாணத்துக் களக் கடல்களெல்லாம் வளமிழந்து செத்துப் போய்க் கொண்டிருக்கின்றன. அதுவும் போதாதென்று இப்போது விளையாட்டு மைதானம் அமைக்கப் போவதாகச் சொல்லிக்கொண்டு மண்டைதீவுப் பகுதியிலுள்ள பல்லாயிரம் கண்டல், கண்ணா மரங்கள் அழிக்கப் பட இருக்கின்றன. தமிழ்ப் பிரதேசங்களில் விளையாட்டு மைதானம் அமைப்பதில் எதிர்ப்பில்லை ஆனால், அதை எங்கே அமைக்கிறோம், அபிவிருத்தி என்ற பெயரால் எவற்றையெல்லாம் அழித்து வருகின்றோம் என்ற சிந்தனையும் விழிப்புணர்வும் நமக்கு ஏன் இன்னும் ஏற்படுவதாக இல்லை...?

இத்தகைய வளங்கள், சுற்றுப்புறச் சூழல்கள் போன்றவை பற்றிய விழிப்புணர்வை நமது மக்களுக்கு ஏற்படுத்தும் அரிய முயற்சியைத்தான் நமது கடலின் மகனார் அஞ்சலோ அருண் சமூக ஊடகங்களில் மூலமாகச் செய்து வருகின்றார். எமது தமிழ் ஊடகங்கள் செய்ய மறந்த, அல்லது மறுதலிக்கும் பணியை தனியனாக முன்னெடுத்துவரும் அருணின் முயற்சியை நாம் வரவேற்பதோடு, அவரது இந்தப் பதிவுகளை நாம் பார்வையிட்டு ஆதரவு வழங்க வேண்டியது நமது கடமையாகும். இவற்றைப் பார்வையிடுவதனூடாக நமது கடல் வளங்களின் சிறப்புக்களை நாம் அறிந்து கொள்ளும் பலாபலன்களையும் பெறுவோம்.

அருணின் பதிவுகளிலிருந்து சில கடல் உயிரிகளின் படங்கள்:-

|  |  |  |  |  |
|---|---|---|---|---|
| கடல்நட்சத்திரம், | கடலட்டை | ஓரியா விளைமீன் | கொடிவாளை | குட்டூறு |

**அருணின் சமூகத் தளங்களின் விபரங்களைக் கீழே காணலாம்.**

முகநூல்: ஈழத்து மீனவன் https://www.facebook.com/profile.php?id=61587225223102

யூரியூப்: https://www.youtube.com/@elaththumeenavan



# குருநகர் படகு விபத்தும் அரச அதிகாரிகளின் அசமந்தப் போக்கும்!

Rev. Fr. S. Anpurasa O.M.I.

06.03.2026 அன்று மாலை யாழ்ப்பாணம், குருநகரில் இருந்து பாலைதீவு புனித அந்தோனியார் திருத்தலத்திற்குப் பயணிகளுடன் புறப்பட்ட படகு ஒன்று நீரில் கவிழ்ந்து இருவர் இறந்திருக்கிறார்கள். இருவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் உயிருக்காகப் போராடி மீண்டார்கள் ஏனையோரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெறுற்றார்கள். இது மிகவும் கவலைக்குரிய சம்பவம். இந்நேரத்தில் “பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த சம்பவமாக” நம் கருத்துக்கள் மாறிவிடக்கூடாது.

எனினும்,
சில பிரயோசனமான கருத்துகளை விழிப்புணர்வுக்காக இந்நேரத்தில் முன்வைப்பதும் அவசியமாகிறது. நயினாதீவு, கச்சைதீவு, பாலைதீவு, கற்கடதீவு போன்ற பல தீவுகளில் கோவில், ஆலய திருநாள்கள் நடைபெறுகிறபோது ஒரே நேரத்தில் பல்லாயிரக் கணக்கானவர்கள் கடலைக் கடந்து செல்லவேண்டி இருக்கிறது. இவ்வாறான நேரங்களில் பிரயாண மற்றும் ஏனைய ஒழுங்குகளை மேற்கொள்வதற்கு அரசு, மாவட்ட மட்டத்திலான ஓர் உயர்மட்டக் கூட்டத்தைச் சில தடவைகள் ஏனும் நடத்துகிறது, ஆயத்தங்களை மேற்கொள்கிறது.

இந்த உயர்மட்டக் குழுவில் அனைத்து தரப்பினரும் பங்கெடுக்கிறார்கள். உதாரணமாக, பிரதேச, மாவட்ட உயர் அரச அதிகாரிகள், போக்குவரத்துத் துறையினர், கடற் படையினர், பொலிசார், கோவில், ஆலய நிருவாகத்தினர் எனப் பல துறைசார்ந்தவர்கள் இக்கூட்டங்களில் கலந்து ஆயத்தங்களை மேற்கொள்கிறார்கள். ஆனால், குறிப்பாக, வள்ளங்கள், படகுகளில் பயணிக்கிறபோது பயணிகள் கட்டாயமாக அணிந்துகொள்ள வேண்டிய உயிர்காக்கும் அங்கிகளை (Life jackets) படகு உரிமையாளர்களோ அல்லது அரச அதிகாரிகளோ அல்லது கடற்படையினரோ அமுல்படுத்துவதில்லை.

சம்பவ நாளன்று பயணம் செய்தவர்கள் உயிர்காக்கும் அங்கிகள் இன்றியே பயணித்திருக்கிறார்கள். உயிர்காக்கும் அங்கிகளை அணிந்திருந்தால் உயிரிழப்புகளைத் தவிர்த்திருக்க முடியும். இது ஒரு சிறிய விடயம், ஒருசிறிய அங்கி. ஆனால், இவ்விடயத்தை கருத்தில் கொள்ளாத காரணத்தால் இவ்வாறான இழப்புகளைச் சந்தித்த வண்ணமாகவே நாம் இருக்கிறோம். இவ்விடயம் குறித்து நம் வரலாற்றில் இருந்து ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும்.



1990களில் கிளாலிப் படகுப் பயணத்தில் உயிர்காக்கும் அங்கிகள் இல்லாத சூழலில், ஒல்லித் தேங்காய்களை, உயிர்காக்கும் அங்கிகளுக்கு மாற்றீடாகப் பயன் படுத்துவதற்கு ஒவ்வொரு பயணியும் வைத்திருக்க வேண்டும் என்பதை அக்காலத்தின் காவல் தெய்வங்கள் கட்டாயமாக்கி இருந்தார்கள். அக்காலப் பகுதியில் கடலில் நடந்த தாக்குதல்களில் ஒல்லித் தேங்காய்களால் உயிர் பிழைத்தவர்கள் அநேகர்.

இன்று, எல்லா வசதிகள், வாய்ப்புகள் இருக்கிற சூழலிலும், குறிப்பாக, உயிர்காக்கும் அங்கிகள் (life jackets) தாராளமாகக் கிடைக்கக்கூடிய சூழலிலும் அவற்றைப் பயன்படுத்தாமல் அநியாயமாக உயிர்களை இழக்கிறோம் என்பதைச் சிந்திக்கும்போது மனம் பேதலிக்கிறது.

இவ்விபத்து நடந்து முடிந்த பின், உயிர்காக்கும் அங்கிகள் கொண்டு வரப்பட்டு இருக்கின்றன. அமைச்சர், முழு விசாரணையைக் கோரியிருக்கிறார்!

தெரியாமல்தான் கேட்கிறேன், இந்நாட்களில் மக்கள் இவ்வாறான கடற்பயணங்களை மேற்கொள்கிறார்களென்று இவர் அறியாமலா இருந்தார்?
அறியாதிருந்தால், பொறுப்பில் ஏன் இருக்கிறார்? அறிந்திருந்தால், ஏன் பாதுகாப்பு முன்னேற்பாடுகளை மேற்கொள்ளவில்லை? விசாரணை முடிந்ததும் அமைச்சர் இக்கேள்விகளுக்கும் பதில்கூறவேண்டும்! “சிஸ்ரம் சேஞ்” எல்லாம் உங்களுக்கு எட்டாக்கனி!
முதலில், சாதாரண கடமைகளை ஒழுங்காகவும் சரியாகவும் பொறுப்புடனும் செய்யப் பாருங்கள்....! நாடு முன்னேறும்! ■

# சிறுவர் பூஞ்சோலை

ஒரு குழந்தையை சாப்பிட விரும்பும் “முதலை அக்கிறில்லஸ் (krokkedillen Akrilles)” என்னும் கதையினை கேட்ட பின்னர் Leah என்ற சிறுமி வரைந்த படம்

**Leah Shaaru Nisanth (6 år )**






**Produktdetaljer:**

ISBN 9788204109781
Publisert 2005
Utgave 1. utgave
Utgiver Cappelen Damm AS
Vekt 350 gr
Høyde 275 mm
Bredde 225 mm
Dybde 8 mm
Aldersnivå 3-6
Språk Bokmål
Format Innbundet
Sjanger Skjønnlitteratur

Forfatter Donnio, Sylviane
Illustratør Monfreid, Dorothée de
Oversetter Johansen, Eldrid




# “நெய்தல் பத்து“

**பாடல் தொகுப்பிற்கான இன்னொரு பாடல்**

தினம் தினம் கீறிக்கிழித்து
காயப் படுத்தப்படும் கடலாள்
மாபெரிய வலிகளை சுமப்பவள்
ஆயினும் அவள்
காற்றின் இசையில்,
அலைகளின் தாளத்தில்
பாடிக்கொண்டே இருப்பாள்
தனது கரை நீளமுமாய்
மென்மையான காதலை......

–தமயந்தி




**மிக விரைவில்...**